மனைப்பிரிவு வரைபடம் விதிமுறைக்கு உட்பட்டு உள்ளதாலும், விண்ணப்பதாரர் Coromendal Ennore Employees Co-Operative Housing Society Ltd rep by his President Mr. M. Ramesh அம்மனையினை மேம்படுத்துவதற்கு உரிமை உள்ளவராக கருதுவதாலும் சாலைக்கென ஒதுக்கப்பட்ட 1571.80 ச.மீ பரப்பளவு நிலமும், சென்னை மாநகராட்சி பொது பயன்பாட்டிற்காக 23.60 ச.மீ பரப்பளவு நிலம் தானப்பத்திரம் மூலம் பெருநகர சென்னை மாநகராட்சி எடுத்துக் கொள்ளலாம் என்று கருத்தபடுகிறது.

எனவே,

(1) S.No.220B of Kosapur villageல் அமைந்துள்ள நிலத்திற்கு மனைப்பிரிவு வேண்டி விண்ணப்பிக்கப்பட்டுள்ள திட்ட வரைபடத்தின்படி மொத்த பரப்பளவு 6060.00 சதுர மீட்டர் ஆகும். அவற்றில் சாலைக்கு 1571.80 ச.மீ நிலத்தினை சாலைக்காகவும் மற்றும் பொது பயன்பாட்டிற்காகவும் 23.60ச.மீ நிலம் (1) Coromendal Ennore Employees Co-Operative Housing Society Ltd rep by his President Mr. M. Ramesh அவர்களிடமிருந்து தானப்பத்திரம் மூலம் பெருநகர சென்னை மாநகராட்சி தானமாக எடுத்துக் கொள்வதற்கும்,

(2) சாலைக்காக ஒதுக்கப்பட்டுள்ள நிலத்தில் மேம்பாட்டு பணிகள் மற்றும் தெரு விளக்குகள் அமைக்க செலவின தொகை ரூ.23,40,000/- (ரூபாய் இருபத்து மூன்று லட்சத்து நாற்பதாயிரம் மட்டும்) மனைஉரிமையாளர்களிடமிருந்து "ஆணையர், பெருநகர சென்னை மாநகராட்சி" என்ற பெயரில் வரைவு காசோலையாக வசூலிக்கவும்,

மேற்கண்ட 1 மற்றும் 2 ஆகிய இனங்களுக்கு, சிறப்பு அதிகாரி – நிலைக்குழு(நகரமைப்பு) மற்றும் மன்றம் அவர்களின் அனுமதி கோரிய முதன்மைச்செயலர்/ஆணையரது 09.02.2022 நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

**" தானப்பத்திரம் 1 மற்றும் 2 ஆகிய இனங்களுக்கு, சிறப்பு அதிகாரி - நிலைக்குழு(நகரமைப்பு) மற்றும் மன்றம் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டது".**

* * * * * *

**ப.து.ந.க.எண்.D1/LA/SD/WDCN12/0620/2021**

**தீர்மானஎண்.153/2022** **நாள்:09-02-2022**

## தானப்பத்திரம்

மண்டலம்-12,கோட்டம்-157ல் Tmt. B. Lalitha அவர்கள் S.No.34/2A, 34/2B & 34/2C, Mugalivakkam village ல் அமைந்துள்ள நிலத்திற்கு குடியிருப்பிற்கான மனைப்பிரிவு அனுமதி வேண்டி D1/LA/SD/WDCN12/00620/2021 நாள்:12.10.2021ன்படி விண்ணப்பம் அளித்துள்ளார்கள்.

மனைப்பிரிவில் காட்டப்பட்டுள்ள சாலைக்கான நிலங்களை தானப்பத்திரம் மூலம் வழங்க வேண்டும் என்று அரசாணை G.O.Ms.No.181 வீட்டு வசதி மற்றும் ஊரக வளர்ச்சி துறை, நாள்.09.12.2020 -ல் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி, இம்மனைப்பிரிவில் சாலை, திறந்தவெளி ஒதுக்கீட்டு நிலம் மற்றும் பொது பயன்பாட்டிற்கென ஒதுக்கப்பட்டுள்ள நிலங்களை தானப் பத்திரம் மூலம் பெருநகர சென்னை மாநகராட்சி வசம் ஒப்படைக்கப்பட வேண்டும்.

விண்ணப்பதாரர்களான Tmt. B. Lalitha மனைப்பிரிவில் சாலைக்கென ஒதுக்கப்பட்ட நிலங்களை தானப்பத்திரம் மூலம் பெருநகர சென்னை மாநகராட்சிக்கு ஒப்படைக்க இசைவு தெரிவித்து தானப்பத்திரம் அளித்துள்ளார்கள்.

இது தொடர்பாக கீழ்கண்டவாறு தெரிவித்துக் கொள்ளப்படுகின்றது:

(அ) Tmt. B. Lalitha மனைப்பிரிவு அனுமதி வேண்டி சமர்ப்பித்த திட்ட வரைபடத்தின்படி 7607.33 சதுர மீட்டர் ஆகும். அவற்றில் சாலைக்கென 2555.75 சதுர மீட்டர் நிலம், பொது பயன்பாட்டிற்கான 27.74 சதுர மீட்டர் நிலம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

(ஆ)Tmt. B. Lalitha மனையினை அபிவிருத்தி செய்ய உரிமையுள்ளவராக அறியப்படுகிறார். மனை உரிமையாளர் பட்டாவினை, தனி வட்டாட்சியர், மாதவரம் வட்டம் அவர்களிடம் இருந்து பெற்றுள்ளார்கள்.

(இ) விண்ணப்பதாரர் சமர்ப்பித்த வரைபடம் Tamil Nadu Combined Development & Building Rules, 2019க்கு ஏற்ப உள்ளது. மனைப்பிரிவிற்கு அணுகு சாலையாக 7.20 மீட்டர் அகலம் உள்ள மனைப்பிரிவு சாலை அமைந்துள்ளது. விண்ணப்பதாரர் சமர்ப்பித்த மனைப்பிரிவில் உள்ள மனைகள் அனைத்தும் குறைந்தபட்சம் 72.00 ச.மீ பரப்பளவு உள்ளதாக அமைந்துள்ளது.

(ஈ) Tamil Nadu Combined Development & Building Rules, 2019 ன் படி 10,000 ச.மீ கீழே நிலத்தின் பரப்பளவு இருந்தால் திறந்தவெளி ஒதுக்கீட்டிற்கு நிலமாகவோ அல்லது அதற்கு ஈடான தொகையாகவோ செலுத்தலாம்.

(உ) Tamil Nadu Combined Development & Building Rules, 2019 உள்ள விதிகளின் படி, மனைப்பிரிவு வேண்டி சமர்ப்பிக்கும் பொழுது, மனையின் பரப்பளவில் (சாலை பகுதி நீங்கலாக) மனை பரப்பளவில் 1% பொது பயன்பாட்டிற்கு ஒதுக்கப்பட வேண்டும். அதில் 0.5% TANGEDCO-விற்கும் மற்றும் 0.5% பெருநகர சென்னை மாநகராட்சிக்கும் தானப்பத்திரம் மூலம் அளிக்க வேண்டும். Tmt. B. Lalitha அவர்கள் அதற்கேற்றவாறு 27.74 ச.மீ பரப்பளவு பெருநகர சென்னை மாநகராட்சிக்கு தானமாக அளிக்க இசைவு தெரிவித்துள்ளார். மேலும் 26.88 ச.மீ பரப்பளவு TANGEDCO விற்கும் ஒதுக்க இசைவு தெரிவித்துள்ளார்.

(ஊ)மனைப்பிரிவில் காட்டப்பட்டுள்ள சாலையினை மேம்படுத்த மற்றும் தெரு விளக்குகள் அமைக்க தேவையான தோராய அபிவிருத்தி கட்டணம் விண்ணப்பதாரரிடம் இருந்து வசூலிக்க வேண்டும். மனைப்பிரிவில் காட்டப்பட்டுள்ள சாலையினை மேம்படுத்த மற்றும் தெரு விளக்குகள் அமைக்க தேவையான செலவின தொகை ரூ.30,25,000/- ஆகும்.

**ப.து.ந.க.எண்.D1/LA/SD/WDCN12/0620/2021**

மனைப்பிரிவு வரைபடம் விதிமுறைக்கு உட்பட்டு உள்ளதாலும், விண்ணப்பதாரர் Tmt. B. Lalitha அம்மனையினை மேம்படுத்துவதற்கு உரிமை உள்ளவராக கருதுவதாலும் சாலைக்கென ஒதுக்கப்பட்ட 2555.75 சதுர மீட்டர் பரப்பளவு நிலமும், சென்னை மாநகராட்சி பொது பயன்பாட்டிற்காக 27.74 சதுர மீட்டர் பரப்பளவு நிலம் தானப்பத்திரம் மூலம் பெருநகர சென்னை மாநகராட்சி எடுத்துக் கொள்ளலாம் என்று கருதபடுகிறது.

எனவே,

(1) S.No.34/2A, 34/2B & 34/2C, Mugalivakkam villageல் அமைந்துள்ள நிலத்திற்கு மனைப்பிரிவு வேண்டி விண்ணப்பிக்கப்பட்டுள்ள திட்ட வரைபடத்தில் சாலைக்காக ஒதுக்கப்பட்டுள்ள 2555.75 சதுர மீட்டர் நிலம், சென்னை மாநகராட்சி பொது பயன்பாட்டிற்காக ஒதுக்கப்பட்டுள்ள 27.74 சதுர மீட்டர் நிலம் ஆகியவற்றை Tmt. B. Lalitha அவர்களிடமிருந்து தானப்பத்திரம் மூலம் பெருநகர சென்னை மாநகராட்சி தானமாக எடுத்துக் கொள்வதற்கும்,

(2) சாலைக்காக ஒதுக்கப்பட்டுள்ள நிலத்தில் மேம்பாட்டு பணிகள் மற்றும் தெரு விளக்குகள் அமைக்க செலவின தொகை ரூ.30,25,000/- ஐ (ரூபாய் முப்பது இலட்சத்து இருபத்தி ஐந்தாயிரம் மட்டும்) மனைஉரிமையாளர்களிடமிருந்து ஆணையர், பெருநகர சென்னை மாநகராட்சி" என்ற பெயரில் வரைவு காசோலையாக வசூலிக்கவும்,

மேற்கண்ட *1* மற்றும் *2* ஆகிய இனங்களுக்கு, சிறப்பு அதிகாரி – நிலைக்குழு(நகரமைப்பு) மற்றும் மன்றம் அவர்களின் அனுமதி கோரிய முதன்மைச்செயலர்/ஆணையரது 09.02.2022 நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

**" தானப்பத்திரம் *1* மற்றும் *2* ஆகிய இனங்களுக்கு, சிறப்பு அதிகாரி - நிலைக்குழு(நகரமைப்பு) மற்றும் மன்றம் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டது".**

*** * * * * ***

பதுநகஎண்டி1/112/2021

**தீர்மானஎண்.154/2022** **நாள்:16-02-2022**

## தானப்பத்திரம்

மண்டலம்-4,கோட்டம்-47ல் திரு. S. Sohanlal and திருமதி. Leeladevi அவர்கள் புதிய கதவு எண்.12, பழைய கதவு எண்.68, கத்திவாக்கம் நெடுஞ்சாலை, கொருக்குபேட்டை, சென்னை, R.S.No.1853/4, பிளாக் எண்.33 தண்டையார்பேட்டை கிராமம் என்ற இடத்திற்கு திட்ட அனுமதி மற்றும் கட்டிட அனுமதி வேண்டி பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்-04ல் PPA/WDCN04/08811/2021 நாள்.02.11.2021ன்படி விண்ணப்பித்துள்ளார்கள். அவர்கள் திட்ட அனுமதி மற்றும் கட்டிட அனுமதி வேண்டி விண்ணப்பித்த இடத்திற்கு அணுகு சாலையாக கத்திவாக்கம் நெடுஞ்சாலை அமைய பெற்றுள்ளது. இரண்டாம் முழுமைத் திட்டத்தின்படி கத்திவாக்கம் நெடுஞ்சாலை, 30.00 மீ அகல சாலையாக விரிவாக்கம் செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது. சென்னை பெருநகர வளர்ச்சி குழுமத்தின் விதிகளின்படி, சாலை விரிவாக்கத்திற்கான நிலத்தினை தானப்பத்திரம் மூலம் உள்ளாட்சி அமைப்புகளிடம் மனை உரிமையாளர் ஒப்படைத்த பிறகு தான் திட்ட அனுமதி மற்றும் கட்டிட அனுமதி வழங்க இயலும். ஆகவே மனுதாரர் தங்களுக்கு சொந்தமான நிலத்திலிருந்து சாலை விரிவாக்கம் செய்ய மனையின் நீளம் 8.50 மீட்டர் அகலம் 8.50 மீட்டர் ஆக மொத்தம் 71.91 ச.மீ. நிலத்தினை பெருநகர சென்னை மாநகராட்சிக்கு தானப்பத்திரம் மூலம் வழங்க ஒப்புதல் அளித்துள்ளார்.

பெருநகர சென்னை மாநகராட்சிக்கு ஒப்படைக்கபடவுள்ள நிலத்தை தானமாக பெற்றுக் கொள்ளலாம் என கருதப்படுகிறது.

எனவே,

(1) மனை உரிமையாளர் திரு. S. Sohanlal and திருமதி. Leeladevi அவர்கள் புதிய கதவு எண்.12, பழைய கதவு எண்.68, கத்திவாக்கம் நெடுஞ்சாலை, கொருக்குபேட்டை சென்னை, R.S.No.1853/4, பிளாக் எண்.33 தண்டையார்பேட்டை கிராமம் என்ற இடத்தில் அமைந்துள்ள மனையில் சாலை விரிவாக்கம் செய்ய மனையின் நீளம் 8.50 மீட்டர் அகலம் 8.50 மீட்டர் ஆக மொத்தம் 71.91ச.மீ. நிலத்தினை பெருநகர சென்னை மாநகராட்சி தானப்பத்திரம் மூலம் பெற்றுக் கொள்ளவும்,

(2) தானமாக வழங்கப்பட்ட பகுதியில் சாலை விரிவாக்கப் பணிகளை மேற்கொள்ள செலவாகும் தொகை ரூ.1,46,400/-ஐ (ரூபாய் ஒரு லட்சத்து நாற்பத்து ஆறாயிரத்து நானூறு மட்டும்) மனை உரிமையாளர் திரு. S. Sohanlal and திருமதி. Leeladevi அவர்களிடம் இருந்து ஆணையர், பெருநகர சென்னை மாநகராட்சி என்கின்ற பெயரில் வரைவு காசோலையாக பெறவும்,

மேற்கண்ட 1 மற்றும் 2 ஆகிய இனங்களுக்கு, சிறப்பு அதிகாரி – நிலைக்குழு(நகரமைப்பு) மற்றும் மன்றம் அவர்களின் அனுமதி கோரிய முதன்மைச்செயலர்/ஆணையரது 09.02.2022 நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

**"தானப்பத்திரம் 1 மற்றும் 2 ஆகிய இனங்களுக்கு, சிறப்பு அதிகாரி - நிலைக்குழு(நகரமைப்பு) மற்றும் மன்றம் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டது".**

* * * * * *

**ப.து.ந.க.எண்.D1/LA/SD/WDCN15/0634/2021**

**தீர்மானஎண்.155/2022** **நாள்:17-02-2022**

## தானப்பத்திரம்

மண்டலம்-15,கோட்டம்-198ல் (1) M/s. Shoreline Development Limited, (2) M/s. Rajkumar Theatres Private Limited, (3) M/s. Southern Resorts and Motels Private Limited, (4) Mrs. Meenakshi Ramkumar, (5) Mr. Gaurav Goyal (Represented by Mr. Rajkumar Seethapathy), (6) Mr. Manav Goyal (Represented by Mr. Rajkumar Seethapathy) அவர்கள் S.No.228/1B1, 229/2A, 230/1, 230/2, 242/1B, 232/5A1A, 231/1, 232/2A, 231/2B, 232/1A, 232/3A1A, 3A1B, 242/3B1, 242/2A, 241, 229/2B, 232/1B, 242/1C1, 228/2B, 229/1, 242/1A, 242/1B, 242/4A, 228/2A, 228/1C, 228/2A, 240/1A, 232/2C, 232/4, 239 Uthandi villageல் அமைந்துள்ள நிலத்திற்கு குடியிருப்பிற்கான மனைப்பிரிவு அனுமதி வேண்டி D1/LA/SD/WDCN15/00634/2021 நாள்:26.10.2021ன்படி விண்ணப்பம் அளித்துள்ளார்.

மனைப்பிரிவில் காட்டப்பட்டுள்ள சாலைக்கான நிலங்களை தானப்பத்திரம் மூலம் வழங்க வேண்டும் என்று அரசாணை G.O.Ms.No.181 வீட்டு வசதி மற்றும் ஊரக வளர்ச்சி துறை, நாள்.09.12.2020 -ல் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி, இம்மனைப்பிரிவில் சாலை, திறந்தவெளி ஒதுக்கீட்டு நிலம் மற்றும் பொது பயன்பாட்டிற்கென ஒதுக்கப்பட்டுள்ள நிலங்களை தானப் பத்திரம் மூலம் பெருநகர சென்னை மாநகராட்சி வசம் ஒப்படைக்கப்பட வேண்டும்.

விண்ணப்பதாரர் (1) M/s. Shoreline Development Limited, (2) M/s. Rajkumar Theatres Private Limited, (3) M/s. Southern Resorts and Motels Private Limited, (4) Mrs. Meenakshi Ramkumar, (5) Mr. Gaurav Goyal (Represented by Mr. Rajkumar Seethapathy), (6) Mr. Manav Goyal (Represented by Mr. Rajkumar Seethapathy) அவர்கள் மனைப்பிரிவில் சாலை மற்றும் பொதுபயன்பாட்டிற்கென ஒதுக்கப்பட்ட நிலங்களை தானப்பத்திரம் மூலம் பெருநகர சென்னை மாநகராட்சிக்கு ஒப்படைக்க இசைவு தெரிவித்து தானப்பத்திரம் அளித்துள்ளார்.

இது தொடர்பாக கீழ்கண்டவாறு தெரிவித்துக் கொள்ளப்படுகின்றது:

(அ)(1) M/s. Shoreline Development Limited, (2) M/s. Rajkumar Theatres Private Limited, (3) M/s. Southern Resorts and Motels Private Limited, (4) Mrs. Meenakshi Ramkumar, (5) Mr. Gaurav Goyal (Represented by Mr. Rajkumar Seethapathy), (6) Mr. Manav Goyal (Represented by Mr. Rajkumar Seethapathy) அவர்கள் மனைப்பிரிவு அனுமதி வேண்டி சமர்ப்பித்த திட்ட வரைபடத்தின்படி மொத்த பரப்பளவு 19033.00 ச.மீ ஆகும். அவற்றில் சாலைக்கென மொத்தம் 4211.29ச.மீ, பூங்காவிற்கான நிலம் 1478.47 ச.மீ, மற்றும் பொது பயன்பாட்டிற்கென 76.70 ச.மீ நிலம் ஒதுக்கீடு செய்யப்பட்டு உள்ளது.

(ஆ)(1) M/s. Shoreline Development Limited, (2) M/s. Rajkumar Theatres Private Limited, (3) M/s. Southern Resorts and Motels Private Limited, (4) Mrs. Meenakshi Ramkumar, (5) Mr. Gaurav Goyal (Represented by Mr. Rajkumar Seethapathy), (6) Mr. Manav Goyal (Represented by Mr. Rajkumar Seethapathy) ஆகியோர் மனையினை அபிவிருத்தி செய்ய உரிமையுள்ளவராக அறியப்படுகிறார். மனை உரிமையாளர் பட்டாவினை, வட்டாட்சியர், சோழிங்கநல்லூர் வட்டம் அவர்களிடம் இருந்து பெற்றுள்ளார்.

(இ)விண்ணப்பதாரர் சமர்ப்பித்த வரைபடம் Tamil Nadu Combined Development & Building Rules, 2019க்கு ஏற்ப உள்ளது. மனைப்பிரிவிற்கு அணுகு சாலையாக 9.00 மீட்டர் அகலம் உள்ள சாலை அமைந்துள்ளது. விண்ணப்பதாரர் சமர்ப்பித்த மனைப்பிரிவில் உள்ள மனைகள் அனைத்தும் குறைந்தபட்சம் 220.00 ச.மீ பரப்பளவு உள்ளதாக அமைந்துள்ளது.

(ஈ) Tamil Nadu Combined Development & Building Rules, 2019 ன் படி 10,000 ச.மீ மேல் நிலத்தின் பரப்பளவு இருந்தால் திறந்தவெளி ஒதுக்கீட்டிற்கு நிலமாக ஒதுக்க வேண்டும்.

(உ) மனைப்பிரிவின் பரப்பளவு 10,000 ச.மீ மேல் இருப்பதால் விண்ணப்பதாரர் திறந்தவெளி ஒதுக்கீடு நிலமாக அளித்துள்ளார்.

(ஊ) Tamil Nadu Combined Development & Building Rules, 2019 உள்ள விதிகளின் படி, மனைப்பிரிவு வேண்டி சமர்ப்பிக்கும் பொழுது, மனையின் பரப்பளவில் (சாலை பகுதி நீங்கலாக) மனை பரப்பளவில் 1% பொது பயன்பாட்டிற்கு ஒதுக்கப்பட வேண்டும். அதில் 0.5% TANGEDCO - விற்கும் மற்றும் 0.5% பெருநகர சென்னை மாநகராட்சிக்கும் தானபத்திரம் மூலம் அளிக்க வேண்டும். (1) M/s. Shoreline Development Limited, (2) M/s. Rajkumar Theatres Private Limited, (3) M/s. Southern Resorts and Motels Private Limited, (4) Mrs. Meenakshi Ramkumar, (5) Mr. Gaurav Goyal (Represented by Mr. Rajkumar Seethapathy), (6) Mr. Manav Goyal (Represented by Mr. Rajkumar Seethapathy) அவர்கள் அதற்கேற்றவாறு 76.70 சதுர மீட்டர் பரப்பளவு நிலத்தை பெருநகர சென்னை மாநகராட்சிக்கு தானமாக அளிக்க இசைவு தெரிவித்துள்ளார். அவ்வாறே 73.92 சதுர மீட்டர் பரப்பளவு TANGEDCO விற்கும் ஒதுக்க இசைவு தெரிவித்துள்ளார்.

(எ) மனைப்பிரிவில் காட்டப்பட்டுள்ள சாலையினை அமைப்பதற்கு தேவையான தோராய அபிவிருத்தி கட்டணமாக விண்ணப்பதாரரிடம் இருந்து கட்டணம் வசூலிக்க வேண்டும். மனைப்பிரிவில் காட்டப்பட்டுள்ள சாலையினை அபிவிருத்து செய்ய தேவையான தொகை ரூ.64,50,000/- வசூலிக்கப்பட வேண்டும்.

மனைப்பிரிவு வரைபடம் விதிமுறைக்கு உட்பட்டு உள்ளதாலும், விண்ணப்பதாரர் (1) M/s. Shoreline Development Limited, (2) M/s. Rajkumar Theatres Private Limited, (3) M/s. Southern Resorts and Motels Private Limited, (4) Mrs. Meenakshi Ramkumar, (5) Mr. Gaurav Goyal (Represented by Mr. Rajkumar Seethapathy), (6) Mr. Manav Goyal (Represented by Mr. Rajkumar Seethapathy) அம்மனையினை மேம்படுத்துவதற்கு உரிமை உள்ளவராக கருதுவதாலும் சாலைக்கென ஒதுக்கப்பட்ட சாலைக்கென மொத்தம் 4211.29 ச.மீ, பூங்காவிற்கான நிலம் 1478.47 ச.மீ மற்றும் பொது பயன்பாட்டிற்கென 76.70 ச.மீ பரப்பளவு நிலத்தினையும் தானபத்திரம் மூலம் பெருநகர சென்னை மாநகராட்சி எடுத்துக் கொள்ளலாம் என்று கருதப்படுகிறது.

எனவே,

(1) S.No.228/1B1, 229/2A, 230/1, 230/2, 242/1B, 232/5A1A, 231/1, 232/2A, 231/2B, 232/1A, 232/3A1A, 3A1B, 242/3B1, 242/2A, 241, 229/2B, 232/1B, 242/1C1, 228/2B, 229/1, 242/1A, 242/1B, 242/4A, 228/2A, 228/1C, 228/2A, 240/1A, 232/2C, 232/4, 239 Uthandi village ல் அமைந்துள்ள நிலத்திற்கு மனைப்பிரிவு வேண்டி விண்ணப்பிக்கப்பட்டுள்ள திட்ட வரைபடத்தில் சாலைக்காக ஒதுக்கப்பட்டுள்ள 4211.29 ச.மீ நிலம், பூங்காவிற்கான 1478.47 சதுர மீட்டர் நிலம் மற்றும் பொது பயன்பாட்டிற்காக ஒதுக்கப்பட்டுள்ள 76.70 சதுர மீட்டர் நிலத்தினையும் (1) M/s. Shoreline Development Limited, (2) M/s. Rajkumar Theatres Private Limited, (3) M/s. Southern Resorts and Motels Private Limited, (4) Mrs. Meenakshi

Ramkumar, (5) Mr. Gaurav Goyal (Represented by Mr. Rajkumar Seethapathy), (6) Mr. Manav Goyal (Represented by Mr. Rajkumar Seethapathy) அவர்களிடமிருந்து தானப்பத்திரம் மூலம் பெருநகர சென்னை மாநகராட்சி தானமாக எடுத்துக் கொள்வதற்கும்,

(2) சாலைக்காக ஒதுக்கப்பட்டுள்ள நிலத்தில் சாலை மற்றும் தெரு விளக்குகள் அமைக்க செலவின தொகை ரூ.64,50,000/- (ரூபாய் அறுபத்து நான்கு இலட்சத்து ஐம்பதாயிரம் மட்டும்) விண்ணப்பதாரரிடம் இருந்து ஆணையர், பெருநகர சென்னை மாநகராட்சி" என்ற பெயரில் வரைவு காசோலையாக வசூலிக்கவும்,

மேற்கண்ட 1 மற்றும் 2 ஆகிய இனங்களுக்கு, சிறப்பு அதிகாரி - நிலைக்குழு(நகரமைப்பு) மற்றும் மன்றம் அவர்களின் அனுமதி கோரிய முதன்மைச்செயலர்/ஆணையரது 16.02.2022 நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

**"தானப்பத்திரம் 1 மற்றும் 2 ஆகிய இனங்களுக்கு, சிறப்பு அதிகாரி - நிலைக்குழு(நகரமைப்பு) மற்றும் மன்றம் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டது".**

*** * * * * ***

**ம.அ.5ந.க.எண்.சி2/481/2021**

**தீர்மானஎண். 156/2022** **நாள்:17-02-2022**

**பெருநகர சென்னை மாநகராட்சி - மண்டலம்-5, பகுதி-12,13 மற்றும் 14, கோட்டம்-49 முதல் 63 வரை துப்புரவு பணி - நிரந்தர பணியாளர்கள் பற்றாக்குறை - 786 எண்ணிக்கையிலான தற்காலிக துப்புரவு பணியாளர்களை தேசிய நகர்புற வாழ்வாதார இயக்கம் (NULM) மூலம் நியமனம் செய்ய மன்ற தீர்மானம் பெறப்பட்டது - பணிகாலம் முடிவடையும் நிலையில் உள்ளது - மேலும் 01.02.2022 முதல் 31.10.2022 வரை 9 மாதங்களுக்கு 864 எண்ணிக்கையிலான தேசிய நகர்புற வாழ்வாதார இயக்கம் (NULM) மூலம் தற்காலிக துப்புரவு பணியாளர்களை கொண்டு துப்புரவு பணி மேற்கொள்ள நிர்வாக அனுமதி.**

பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்-5, பகுதி-12,13 மற்றும் 14, கோட்டம்-49 முதல் 63 வரை உள்ள பகுதிகளில் துப்புரவு பணிகளான தெருக்களில் கூட்டுவது, குப்பைகளை அகற்றுவது மற்றும் இதர பணிகளை மேற்கொள்வதற்கு 2083 எண்ணிக்கையிலான துப்புரவு பணியாளர்கள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளனர். சிறப்பு அதிகாரி மற்றும் ஆணையர் அவர்களின் ஆணையின் படி, மேற்கண்ட பணியாளர்களில் உள்ள காலிப்பணியிடங்களை 786 எண்ணிக்கையிலான தற்காலிக துப்புரவு பணியாளர்களை தேசிய நகர்புற வாழ்வாதார இயக்கம் (NULM) மூலம் நியமனம் செய்ய நிர்வாக அனுமதி பெறப்பட்டு, சிறப்பு அதிகாரி, மன்ற தீர்மான எண்.474/2021, நாள்:08.05.2021 பெறப்பட்டு 786 எண்ணிக்கையிலான தற்காலிக NULM துப்புரவு பணியாளர்களை கொண்டு துப்புரவு பணி நடைபெற்று வருகிறது. தற்போது மேற்கண்ட மன்ற தீர்மானத்திற்கான பணிக்காலமானது 31.01.2021 அன்றுடன் முடிவடைய உள்ளது.

மண்டலம்-5 ஐ சார்ந்த பகுதிகளில் சென்னையில் முக்கிய பழமை வாய்ந்த இராயபுரம், பிராட்வே, எம்.சி ரோடு, வண்ணாரப்பேட்டை, எழும்பூர் போன்ற பகுதிகள் உள்ளடக்கியதாகும். மேலும், கடற்கரை சாலைகள், தலைமைச் செயலகம், நேவல் கேஸ், சென்னை உயர் நீதிமன்றம் மற்றும் ரிப்பன் கட்டிட வளாகத்தில் சென்னை மாநகராட்சி பணியாளர்களை கொண்டு தனியாக தினமும் துப்புரவு பணிகள் மேற்கொள்ளப்பட வேண்டும். இது தவிர சென்னை மாநகராட்சி, மண்டலம்-5க்கு உட்பட்ட பகுதிகளில் அரசு ஸ்டான்லி மருத்துவமனை, அரசு பல் மருத்துவமனை, அரசு கண் மருத்துவமனை, எழும்பூர் குழந்தைகள் மற்றும் மகப்பேறு மருத்துவமனை, சென்னை தீவுத் திடல், சென்ட்ரல் இரயில் நிலையம், எழும்பூர் ரயில் நிலையம், பிராட்வே பேருந்து நிலையம், மூலக்கொத்தளம் இடுகாடு, சென்னை பெருநகர் குற்றவியல் நீதிமன்றம், அல்லிக்குள வளாகம் மற்றும் நீதிமன்றம், பீச் ஸ்டேஷன் இரயில் நிலையம், பழமை வாய்ந்த இந்து கோவில்கள், பழமை வாய்ந்த மசூதிகள், அரண்மனைக்கார தெரு, கிருஸ்துவ ஆலயம், சென்னை துறைமுகம், சென்னை எழும்பூர் அருங்காட்சியகம், பூங்காக்கள், விளையாட்டு திடல், ஓட்டல்கள், குடிசை மாற்று வாரிய குடியிருப்புகள் ஆகியன உள்ளன மேற்கண்ட பகுதிகளில் பொதுமக்கள் அதிகமாக வந்து செல்வதால் குப்பைகள் அதிக அளவில் அகற்ற வேண்டி உள்ளது. இந்நிலையில் மேற்கண்ட மன்ற தீர்மானத்தின் பணிக்காலமானது 31.01.2022 அன்று முடிவடையுள்ளதால், தற்போது கீழ்கண்ட அட்டவணையில் குறிப்பிட்டுள்ளவாறு காலிபணியிடங்களுக்கு தற்காலிக துப்புரவு பணியாளர்களை நியமனம் செய்து துப்பரவு பணி மேற்கொள்ள வேண்டியது அவசியமாகிறது.

**துப்புரவு பணியாளர் தேவைப் பட்டியல் கணக்கீடு:**

| பகுதி எண் | வார்டு எண் | ஒப்பளிக்கப்ட்ட பணியாளர் எண்ணிக்கை | 12.01.2022 அன்று பணிபுரியும் நிரந்தர பணியாளர்களின் எண்ணிக்கை | 12.01.2022 அன்று காலி பணியிடம் | nulm குழுக்களின் பெயர்கள் | குழுக்கள் வாரியாக பணிபுரியும் NULM துப்புரவு பணியாளர்களின் | கோட்டம் வாரியாக குழுக்களில் புரியும் NULM துப்புரவு பணியாளர்களின் எண்ணிக்கை | சுழற்சி முறையில் நாள் ஒன்றுக்கு பணியமர்த்தப்படும் NULM பணியாளர்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 |
| 12 | 49 | 102 | 64 | 38 | காவேரி | 19 | 40 | 36 |
| | | | | | கங்கை | 21 | | |

<u>ம.அ.5ந.க.எண்.சி2/481/2021</u>

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | 50 | 130 | 62 | 68 | ஆவாரம் பூ | 30 | 63 | 54 |
| | | | | | செம்பருத்தி | 33 | | |
| | 51 | 80 | 52 | 28 | அன்னை தெரசா | 17 | 32 | 28 |
| | | | | | வீர மங்கை | 15 | | |
| | 52 | 124 | 59 | 65 | ஆற்றல் | 20 | 55 | 46 |
| | | | | | காமராஜர் | 19 | | |
| | | | | | தந்தை பெரியார் | 16 | | |
| | 53 | 165 | 93 | 72 | மகாத்மா காந்தி | 31 | 94 | 82 |
| | | | | | டாக்டர்அப்துல்கலாம் | 32 | | |
| | | | | | சுபாஷ் சந்திரபோ | 31 | | |
| | TPF | 34 | 22 | 12 | வெண்புறா | 20 | 20 | 18 |
| 13 | 54 | 109 | 68 | 41 | நறுமுகை | 15 | 51 | 39 |
| | | | | | நறுமலர் | 16 | | |
| | | | | | நன்மொழி | 20 | | |
| | 55 | 87 | 57 | 30 | மாணிக்கம் | 16 | 33 | 28 |
| | | | | | தேசியபறவை | 17 | | |
| | 56 | 101 | 59 | 42 | ராணி | 18 | 35 | 30 |
| | | | | | ரோஜா | 17 | | |
| | 57 | 188 | 81 | 107 | இன்பா | 21 | 106 | 84 |
| | | | | | இன்சுவை | 10 | | |
| | | | | | இன்தமிழ் | 21 | | |
| | | | | | இளநிலா | 20 | | |
| | | | | | இன்பநிலா | 17 | | |
| | | | | | முழுநிலா | 17 | | |
| | 60 | 187 | 84 | 103 | அரும்பு | 16 | 101 | 92 |
| | | | | | அங்கவை | 19 | | |
| | | | | | அண்ணம் | 18 | | |
| | | | | | அணிமலர் | 19 | | |
| | | | | | அழகி | 16 | | |
| | | | | | அல்லி | 13 | | |
| | LFZ | 42 | 22 | 20 | யாழினி | 20 | 39 | 31 |
| | | | | | விகடன் | 19 | | |
| 14 | 58 | 158 | 98 | 60 | வெண்ணிலா | 28 | 85 | 76 |
| | | | | | வளர்நிலா | 29 | | |
| | | | | | இளயநிலா | 28 | | |
| | 59 | 170 | 127 | 43 | இசை | 18 | 87 | 74 |
| | | | | | மழை | 19 | | |
| | | | | | குயில் | 21 | | |
| | | | | | நதி | 29 | | |
| | 61 | 169 | 108 | 61 | கங்கா | 21 | 65 | 60 |
| | | | | | யமுனா | 21 | | |
| | | | | | சரஸ்வதி | 23 | | |

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | 62 | 120 | 75 | 45 | தூய்மை இந்தியா | 18 | 53 | 47 |
| | | | | | பசுமை பாரதம் | 18 | | |
| | | | | | பனிமலர் | 17 | | |
| | 63 | 117 | 88 | 29 | குறிஞ்சி | 14 | 45 | 39 |
| | | | | | முல்லை | 15 | | |
| | | | | | பாலை | 16 | | |
| மொத்தம் | | 2083 | 1219 | 864 | மொத்தம் | 1004 | 1004 | 864 |

மேற்கண்ட அட்டவணைப்படி மண்டலம் – 5 வார்டு 49 முதல் 63 வரை, TPF மற்றும் LFZ ஆகிய வார்டுகளுக்கு ஒதுக்கப்பட்ட மொத்த நிரந்தர பணியாளர்களின் எண்ணிக்கை 2083 ஆகும். இதில் தற்போது 1219 பணியாளர்கள் பணிபுரிந்து வருவதால் 864 காலிப்பணியிடங்களாக உள்ளது. எனவே, கோட்டங்களின் தன்மைக்கு ஏற்றவாறு அட்டவணையில் கலம் 9ல் குறிப்பிட்டுள்ளவாறு 864 எண்ணிக்கையிலான தற்காலிக துப்புரவு பணியாளர்களை தேசிய நகர்புற வாழ்வாதார இயக்கம் (NULM) மூலம் நியமனம் செய்வது அவசியமாகிறது.

இதனை தொடர்ந்து தெரிவிப்பது யாதெனில், எதிர்வரும் காலங்களில் பொது சுகாதாரம் சீர்கெடாத வகையில் மக்கள் நலன் கருதியும் நிர்வாக நலன் கருதியும் துப்புரவு பணிகளை தொடர்ந்து மேற்கொள்ள மேலும் 01.02.2022 முதல் 31.10.2022 வரை 9 மாதங்களுக்கு தேசிய நகர்புற வாழ்வாதார இயக்கம் (NULM) மூலம் தற்காலிக துப்புரவு பணியாளர்களை நியமனம் செய்திட வேண்டும் என தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

திடக்கழிவு மேலாண்மைத்துறையின் 19.08.2021 நாளிட்ட சுற்றறிக்கையில், மாவட்ட ஆட்சியர் அலுவலக தற்காலிக பணியாளர்களின் ஊதிய விகிதத்தின் படி நாள் ஒன்றுக்கு ரூ.410/- என வழங்க குறிப்பிடப்பட்டுள்ளது. எனவே, 864 பணியாளர்களுக்கு ஆகும் செலவு ரூ.410 x 864 x 273 நாட்கள்என 01.02.2022 முதல் 31.10.2022 வரை 9 மாத காலத்திற்கு ரூ.9,67,07,520/- (ரூபாய் ஒன்பது கோடியே அறுபத்தி ஏழு இலட்சத்து ஏழாயிரத்து ஐந்நூற்று இருபது மட்டும்) தேவைப்படும் என தெரிவித்துக் கொள்ளப்படுகிறது. இப்பணிக்காக கணக்கு குறியீட்டு எண் 40-41-03 கணக்கு தலைப்பு எண் 210-100-601 ன் கீழ் தீர்வு செய்ய வேண்டி உள்ளது.

எனவே,

1) பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம் – 5, பகுதி 12,13 மற்றும் 14 ஆகிய பகுதிகளில் 864 பணியாளர்களை தேசிய நகர்புற வாழ்வாதார இயக்கம் (NULM) மூலம் 01.02.2022 முதல் 31.10.2022 வரை 9 மாதங்களுக்கு தற்காலிக துப்புரவு பணியாளர்களை அவசரம் அவசியம் கருதி கோட்டங்களில் உள்ள பணியின் தன்மைக்கு ஏற்றவாறு அட்டவனையில் கலம் 9ல் குறிப்பிட்டுள்ளவாறு நியமிக்கவும், 01.02.2022 முதல் ஊதியம் வழங்க அனுமதி வேண்டியும்,

2) எதிர் வரும் காலத்தில் மண்டலம்-5 துப்புரவு பணியானது தனியார் வசம் ஒப்படைக்கப்பட்டு அவர்கள் இப்பணியினை மேற்கொள்ளும் பட்சத்தில் தேசிய நகர்புற வாழ்வாதார இயக்கம் மூலம் மேற்கொள்ளப்படும் இப்பணியாணையினை ரத்து செய்ய அனுமதி வேண்டியும்,

3) மேற்கண்ட தொழிலாளர்களுக்கான குறைந்த பட்ச அடிப்படை ஊதியமாக நாள் ஒன்றுக்கு ரூ.410/- வீதம் 864 பணியாளர்களுக்கு 01.02.2022 முதல் 31.10.2022 வரை 273 நாட்களுக்கு ஆகும் செலவு தொகை ரூ.410 x 864 x 273 என 01.02.2022 முதல் 31.10.2022 வரை 9 மாத காலத்திற்கு ரூ.9,67,07,520/- ( ரூபாய் ஒன்பது கோடியே அறுபத்தி ஏழு இலட்சத்து ஏழாயிரத்து ஐந்நூற்று இருபது மட்டும்) ஆகும். இதற்கு சிறப்பு அலுவலர் அவர்கள் அனுமதி வேண்டியும் எதிர்வரும் காலங்களில் தினக்கூலி பணியாளர்களின் ஊதியம் தமிழக அரசால் உயர்த்தி நிர்ணயிக்கப்படின் நிர்ணயிக்கப்படும் ஊதியத்தை வழங்க நிர்வாக அனுமதி வேண்டியும்,

4) மேற்படி பணிகளுக்கான செலவு தொகையை கணக்கு குறியீட்டு எண் 40-41-03 கணக்கு தலைப்பு எண் 210-100-601 ன் கீழ் மேற்கொள்ளவும்,

மேற்கண்ட 1 முதல் 4 வரை உள்ள இனங்களுக்கு, சிறப்பு அதிகாரி- நிலைக்குழு(சுகாதாரம்), நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களின் அனுமதி கோரிய முதன்மைச்செயலர் மற்றும் ஆணையரது 16.02.2022 நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

**"1 முதல் 4 வரை உள்ள இனங்களுக்கு, சிறப்பு அதிகாரி - நிலைக்குழு(சுகாதாரம்), நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டது".**

* * * * * *

**பே.சா.து.ந.க.எண்.பி3/3485/2021**

**தீர்மானஎண். 157/2022** **நாள்:25-02-2022**

**பெருநகர சென்னை மாநகராட்சி - பேருந்து சாலைகள் துறை – பேருந்து தட சாலைகளில் ஒட்டுப்பணி மேற்கொள்ளுதல், நடைபாதைகள் பழுதுபார்த்தல், நிழற்குடைகள் சீரமைத்தல், சாலை மையத் தடுப்பு சீரமைத்தல் மற்றும் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளும் பணிக்கு – 4 சிப்பங்களுக்கு மறு ஒப்பம் கோரப்பட்டது - குறைந்த விலைபுள்ளி அளித்த ஒப்பந்ததாரர்களுக்கு பணியினை அளிக்க அனுமதி.**

பெருநகர சென்னை மாநகராட்சி மூலம் 387 கி.மீ நீளமுடைய 471 பேருந்து தட சாலைகள் மற்றும் 5270.36 கி.மீட்டர் நீளமுடைய 34,640 உட்புற சாலைகள் பராமரிக்கப்பட்டு வருகிறது.

சிறப்பு அதிகாரி, மன்ற தீர்மான எண். 867/2021, நாள்:03.12.2021ன்படி, சேவைத் துறைகளான குடிநீர் (ம) கழிவுநீர் மற்றும் மின்சார இணைப்பு மற்றும் பழுது பார்க்கும் பணிக்காகவும் சாலைகள் அவ்வப்போது பல இடங்களில் வெட்டப்படுகிறது. மேலும் OFC நிறுவனங்களால் கேபிள் பதிக்கும் பணிக்காகவும் அனுமதி வழங்கப்பட்டு சாலை வெட்டுக்கள் மேற்கொள்ளப்பட்டு சாலைகள் செப்பனிடப்பட்டு வரப்படுகிறது. இவ்வாறு அரசு சேவைத்துறைகள் மற்றும் OFC நிறுவனங்களால் மேற்கொள்ளப்பட்ட சாலை வெட்டுகளாலும், மழை மற்றும் இயற்கை சீற்றங்களால் சேதமைடைந்த சாலைகளை சீரமைக்க ரூ.6.50 கோடிக்கு நிர்வாக அனுமதி பெறப்பட்டது .

மண்டலம் 1 முதல் 15 வரையிலான சேதமடைந்த பேருந்து தட சாலைகளில் ஒட்டுப்பணி மேற்கொள்ளுதல், நடைபாதைகள் பழுதுபார்த்தல், நிழற்குடைகள் சீரமைத்தல், சாலை மையத் தடுப்பு சீரமைத்தல் மற்றும் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள 7 எண்ணிக்கையிலான சிப்பங்களாக பிரிக்கப்பட்டு, ஒப்பங்கள் கோருவதற்கு முதன்மைச் செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 13.12.2021 அன்று ஒப்புதல் பெறப்பட்டது.

இதில் 3 எண்ணிக்கையிலான சிப்பங்களுக்கு சிறப்பு அதிகாரி (மன்றம்) அவர்களின் ஒப்புதல் பெற்று ஒப்பந்ததாரர்களுக்கு ஒப்ப ஏற்பு கடிதம் வழங்கப்பட்டுள்ளது. மீதமுள்ள 4 சிப்பங்களில் கலந்து கொண்ட ஒப்பந்ததாரர்களின் தொழில்நுட்ப ஆவணங்கள் தகுதி பெறாத காரணத்தினால் இவரது ஒப்பம் நிராகரிப்பட்டு, குறுகிய கால மறு ஒப்பம் “இரண்டு உறைகள்” என்ற முறையில் ஒப்பம் இறுதி நாள் 24.01.2022 என ஒப்ப அறிவிப்பு ஆங்கில நாளிதழ் “Deccan Chronicle”, தமிழ் நாளிதழ் “முரசொலி” 12.01.2022 நாளிட்ட நாளிதழ் 13.01.2022 அன்று பெருநகர சென்னை மாநகராட்சி ஒப்பந்தப்புள்ளி செய்தி மலரிலும் மாநில ஒப்பந்தபுள்ளி செய்தி மலரிலும் பிரசுரிக்கப்பட்டது.

ஒப்ப நாளான 25.01.2022 அன்று தொழில் நுட்ப ஆவணம் கலந்து கொண்ட ஒப்பந்ததாரர்கள் முன்னிலையில் திறக்கப்பட்டது. தொழில்நுட்ப ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டு தகுதி வாய்ந்த ஒப்பந்ததாரர்கள் தேர்வு செய்யப்பட்டார்கள். எனவே, தகுதி வாய்ந்த ஒப்பந்ததாரர்களின் நிதி ஆவணம் 27.01.2022 அன்று திறக்கப்பட்டது. உள்ளாட்சி மற்றும் நகர்ப்புற தேர்தல் அறிவிப்பு 26.01.2022 அன்று அறிவிக்கப்பட்டதால் தேர்தல் நடத்தை விதிமுறைகள் அமுல்படுத்தப்பட்டு முடிவுற்றதால், தற்போது கோப்பின் மீது மேல்நடவடிக்கை எடுத்து சமர்ப்பிக்கப்படுகிறது. எனவே, குறைந்த ஒப்பந்தபுள்ளி அளித்த ஒப்பந்ததாரர்களின் விலை விவரப்பட்டியல் பின்வருமாறு

**மண்டலம் - 1, 2, 4, 10, 11, 12, 13 & 15 வரையிலான சேதமடைந்த பேருந்து தட சாலைகளில் ஒட்டுப்பணி மேற்கொள்ளுதல், நடைபாதைகள் பழுதுபார்த்தல், நிழற்குடைகள் சீரமைத்தல், சாலை மையத் தடுப்பு சீரமைத்தல் மற்றும் பராமரிப்பு பணிகள்**

**(அட்டவணை-I)**

| S. No (1) | File No / BRR.C.No. (2) | Package (3) | No.of Bidder Participated (4) | Name of the Bidder (L1) (5) | Work Value Including GST (Rs.) (6) | Quoted % (7) |
|---|---|---|---|---|---|---|
| 1 | பி3/3485/2021-1 | 1 | 2 | SHKP CONSTRUCTION | 1,00,00,000.00 | (+)4.95% |
| 2 | பி3/3485/2021-5 | 5 | 2 | JDS ENTERPRISES | 85,00,000.00 | (+)8.00% |
| 3 | பி3/3485/2021-6 | 6 | 2 | T.M.SUBRAMANIAM & CO | 70,00,000.00 | (+)8.00% |
| 4 | பி3/3485/2021-7 | 7 | 2 | JDS ENTERPRISES | 80,00,000.00 | (+)8.00% |

**பே.சா.து.ந.க.எண்.பி3/3485/2021**

குறைந்த விலைப்புள்ளி அளித்த ஒப்பந்ததாரரின் ஒப்பப் புள்ளியானது 2021-22ம் ஆண்டு அலுவலக விலை விவரப்பட்டியலுடன் ஒப்பிடுகையில் அதிகமாக இருப்பதை கருத்தில் கொண்டு, குறைந்த ஒப்ப புள்ளிகள் அளித்த ஒப்பந்ததாரர்களிடம் விலைக் குறைப்பு கோரி கடிதம் அளிக்கப்பட்டது. அதன்படி ஒப்பந்ததாரர்கள் விலைக்குறைப்பு செய்து கடிதம் அளித்துள்ளார்கள். விலைக்குறைப்புக்கான ஒப்பத் தொகையின் விவரம் பின்வருமாறு பட்டியலிடப்படுகிறது.

***(அட்டவணை-II)***

| S. No | File No / BRR.C.No. | Package | Name of the Bidder (L1) | Work Value Including GST | Quoted Percentage | % Offered After Negotiations |
|---|---|---|---|---|---|---|
| 1 | பி3/3485/2021-1 | 1 | SHKP CONSTRUCTION | 1,00,00,000.00 | (+)4.95% | (+)4.20% |
| 2 | பி3/3485/2021-5 | 5 | JDS ENTERPRISES | 85,00,000.00 | (+)8.00% | (+)7.00% |
| 3 | பி3/3485/2021-6 | 6 | T.M.SUBRAMANIAM & CO | 70,00,000.00 | (+)8.00% | (+)7.00% |
| 4 | பி3/3485/2021-7 | 7 | JDS ENTERPRISES | 80,00,000.00 | (+)8.00% | (+)7.00% |

மேற்கூறிப்பிட்டுள்ள ஒப்பந்ததாரர்கள் அனைவரும் பேச்சுவார்த்தைக்குப்பின் அளித்த ஒப்ப விகிதத்தை 2021-22ம் ஆண்டு அலுவலக விலை விவரப்பட்டியலுடன் ஒப்பிடுகையில் கூடுதலாக உள்ளதால் மேலும் விலைக்குறைப்பு கோரி ஒப்பந்ததாரர்களுக்கு கடிதம் வழங்கப்பட்டது.

அதன்படி ஒப்பந்ததாரர்கள் விலைக்குறைப்பு செய்து கடிதம் அளித்துள்ளார்கள். விலைக்குறைப்புக்கான ஒப்பத் தொகையின் விவரம் பின்வருமாறு பட்டியலிடப்படுகிறது.

***(அட்டவணை-III)***

| S. No/ P.No | File No / BRR.C.No.B3 / | Package No | Name of the Contractor | Work Value Including GST | Quoted Percentage | % Offered 1st Negotiations | % Offered 2nd and Final Negotiations |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 3485/2021-1 | 1 | SHKP CONSTRUCTION | 1,00,00,000.00 | (+)4.95% | (+)4.20% | (+)3.95% |
| 2 | 3485/2021-5 | 5 | JDS ENTERPRISES | 85,00,000.00 | (+)8.00% | (+)7.00% | (+)3.90% |
| 3 | 3485/2021-6 | 6 | T.M.SUBRAMANIAM & CO | 70,00,000.00 | (+)8.00% | (+)7.00% | (+)3.90% |
| 4 | 3485/2021-7 | 7 | JDS ENTERPRISES | 80,00,000.00 | (+)8.00% | (+)7.00% | (+)3.90% |

எனவே, இந்த ஒப்பங்கள் சம்மந்தமாக கீழ்காணும் விவரங்கள் ஒப்பங்கள் கூர்ந்து ஆராயும் குழுமத்திற்கு சமர்பிக்கப்பட்டது.

1) இந்த ஒப்பந்தப்புள்ளியானது தகுதிவாய்ந்த ஒப்பந்ததாரர்கள் மின்னணு (e-tender) முறையில் கலந்து கொண்ட ஒப்பந்தப்புள்ளி ஆகும். சந்தை நிலவரத்தை கருத்தில் கொண்டால் குறைந்த விலைப்புள்ளி அளித்த ஒப்பந்ததாரர்கள் ஒப்பந்தத் தொகையானது ஏற்றுக் கொள்ளத் தக்க நிலையில் உள்ளது.

2) இத்திட்டத்தின் மூலம் சென்னை மாநகரில் உள்ள பெரும்பாலான சாலைகள் மேம்படுத்தப்படவுள்ளதாலும், அதற்கான மூலப்பொருள்கள் விலை, தொழிலாளர்கள் ஊதிய உயர்வு, மற்றும் போக்குவரத்து வாகன செலவு பெருகி உள்ளதாலும் அலுவலக விலையை விட ஒப்ப விலை அதிகமாக உள்ளது. கொரோனா வைரஸ் நோய் தொற்றிலிருந்து பாதுகாப்பதற்கு தேவையான வசதிகளை தொழிலாளர்களுக்கு ஏற்படுத்தி கொடுப்பது கூடுதல் நிதி சுமை ஏற்படுவதை கருத்தில் கொண்டும் பணிகள் வழங்கலாம் எனக் கருதப்படுகிறது.

**பே.சா.து.ந.க.எண்.பி3/3485/2021**

மேற்குறிப்பிட்ட காரணங்களை கருத்தில் கொண்டு குறைந்த விலை விகிதம் அளித்த கீழ்க்கண்ட ஒப்பந்ததாரர்களுக்கு பணியை வழங்க 24.02.2022 அன்று நடந்த ஒப்பங்கள் கூர்ந்து ஆராயும் குழுமம் கூட்டத்தில் பரிந்துரை வழங்கி உள்ளது.

**அட்டவணை - IV**

| S. No/ P.No (1) | File No / BRR.C.No. (2) | Package (3) | Name of the Bidder (L1) (4) | Amount after 2nd Negotiation (Rs.) (5) | 2021-22 (Schdule of rate)% Offered After 2nd Negotiation (6) |
|---|---|---|---|---|---|
| 1 | பி3/3485/2021-1 | 1 | SHKP CONSTRUCTION | 1,03,95,000/- | (+)3.95% |
| 2 | பி3/3485/2021-5 | 5 | JDS ENTERPRISES | 88,31,500/- | (+)3.90% |
| 3 | பி3/3485/2021-6 | 6 | T.M.SUBRAMANIAM & CO | 72,73,000/- | (+)3.90% |
| 4 | பி3/3485/2021-7 | 7 | JDS ENTERPRISES | 83,12,000/- | (+)3.90% |

எனவே,

1) குறைந்த விலைப்புள்ளி அளித்த ஒப்பந்ததாரர்களுக்கு மேற்கண்ட அட்டவணை-4ல் கலம் எண் 6ல் உள்ள ஒப்ப புள்ளி சதவிகிதம் மற்றும் கலம் எண்.5ல் உள்ள ஒப்பத் தொகைக்கு (12% GST வரி சேர்த்து) பணியினை வழங்கவும்,

2) மேற்காணும் பணிகளுக்கான செலவினத்தை SDRF நிதியில் ஒப்பந்ததாரர்களுக்கு பட்டி தீர்வு செய்யவும்,

மேற்கண்ட 1 மற்றும் 2 ஆகிய இனங்களுக்கு சிறப்பு அதிகாரி - நிலைக்குழு (பணிகள்), நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களின் அனுமதி கோரிய முதன்மைச்செயலர்/ஆணையரது 25.02.2022 நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

**"1 மற்றும் 2 ஆகிய இனங்களுக்கு சிறப்பு அதிகாரி - நிலைக்குழு (பணிகள்), நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டது".**

******

**பே.சா.து.ந.க.எண்.பி4/4716/ 65/2021**

**தீர்மான எண். 158/2022** **நாள்:25-02-2022**

**பெருநகர சென்னை மாநகராட்சி - பேருந்து சாலைகள் துறை - தமிழ்நாடு நகர்ப்புற சாலைகள் மேம்பாட்டு திட்டம் 2021-22ன்கீழ் - மண்டலம்-15ல் உள்ள 19 எண்ணிக்கையிலான உட்புற தார் சாலைகள் மேம்படுத்தும் பணிக்கு மறு ஒப்பம் கோரப்பட்டது - சிப்பம்-65க்கு குறைந்த விலைபுள்ளி அளித்த திருவாளர்கள்.ஸ்ரீ ராம் கன்ஸ்ட்ரக்ஷன்ஸ் அவர்களுக்கு பணியினை அளிக்க அனுமதி.**

தமிழ்நாடு நகர்புற சாலைகள் மேம்பாட்டு திட்டம் (TURIP 2021-22)-ன்கீழ் சாலைகள் மேம்படுத்தும் பணிகளுக்கு 10.11.2021 அன்று நடைப்பெற்ற திட்ட ஒப்புதல் அளிக்கும் குழும (Project Sanctioning committee) கூட்டத்தில் மாநகராட்சிகள், நகராட்சிகள், பேரூராட்சிகளுக்கு சாலைப் பணிகள் மேற்கொள்வதற்கு ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. அதன் விவரம் பின்வருமாறு.

| S.No | ULB's | No.of ULBs | Length in KM | Proposed Estimate Cost | Proposed allocation of Grant under Turip |
|---|---|---|---|---|---|
| | | | | (Rupees in Crore) | |
| 1 | Greater Chennai Corporation | 1 | 161.94 | 109.61 | 109.61 |
| 2 | Other Corporations | 9 | 135.809 | 105.57 | 105.57 |
| 3 | Municipality | 25 | 249.575 | 199.16 | 199.16 |
| 4 | Commissionerate of Town Panchayats | 149 | 122.894 | 82.99 | 82.99 |
| Total | | **184** | **670.218** | **497.33** | **497.33** |

தமிழ்நாடு நகர்புற சாலைகள் மேம்பாட்டு திட்டம் (TURIP 2021-22)-ன்கீழ் சாலைகள் மேம்படுத்தும் பணிகளுக்கு 10.11.2021 அன்று நடைப்பெற்ற திட்ட ஒப்புதல் அளிக்கும் குழும (Project Sanctioning committee) கூட்டத்தில் பெருநகர சென்னை மாநகராட்சிக்கு 22 எண்ணிக்கையிலான பேருந்து தட சாலைகள் ரூ.17.38 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளவும் மற்றும் 929 எண்ணிக்கையிலான உட்புற சாலைகளை மேம்படுத்தவும் ரூ.92.23 கோடிக்கு ஒப்புதல் அளித்துள்ளதை தொடர்ந்து சிப்பங்களாக பிரித்து ஒப்பங்கள் கோருவதற்கு சிறப்பு அதிகாரி, மன்ற தீர்மான எண்.859/2021, நாள்.25.11.2021ன்படி ஒப்புதல் பெறப்பட்டது.

மேற்கண்ட மன்றத்தீர்மானம் பெறப்பட்டதை தொடர்ந்தும் மற்றும் முதன்மைச் செயலர் (ம) ஆணையர் அவர்களின் ஒப்புதல் பெற்று 65 எண்ணிக்கையிலான சிப்பங்கள் கோரப்பட்டது. இதில் 64 எண்ணிக்கையிலான சிப்பங்களுக்கு சிறப்பு அதிகாரி (மன்றம்) அவர்களின் ஒப்புதல் பெற்று ஒப்பந்ததாரர்களுக்கு ஒப்ப ஏற்பு கடிதம் வழங்கப்பட்டுள்ளது. மீதமுள்ள 1 சிப்பத்தில் கலந்து கொண்ட ஒப்பந்ததாரரின் தொழில்நுட்ப ஆவணங்கள் தகுதி பெறாத காரணத்தினால் இவரது ஒப்பம் நிராகரிப்பட்டு, குறுகிய கால மறு ஒப்பம் "இரண்டு உறைகள்" என்ற முறையில் ஒப்பம் இறுதி நாள் 24.01.2022 என ஒப்ப அறிவிப்பு ஆங்கில நாளிதழ் "The Hindu", தமிழ் நாளிதழ் "தினத்தந்தி" 14.01.2022 நாளிட்ட நாளிதழ் 20.01.2022 அன்று பெருநகர சென்னை மாநகராட்சி ஒப்பந்தப்புள்ளி செய்தி மலரிலும் மாநில ஒப்பந்தபுள்ளி செய்தி மலரிலும் பிரசுரிக்கப்பட்டது.

ஒப்ப நாளான 25.01.2022 அன்று தொழில் நுட்ப ஆவணம் கலந்து கொண்ட ஒப்பந்ததாரர்கள் முன்னிலையில் திறக்கப்பட்டது. தொழில்நுட்ப ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டு தகுதி வாய்ந்த ஒப்பந்ததாரர்கள் தேர்வு செய்யப்பட்டார்கள் எனவே, தகுதி வாய்ந்த ஒப்பந்ததாரர்களின் நிதி ஆவணம் 27.01.2022 அன்று திறக்கப்பட்டது. உள்ளாட்சி மற்றும் நகர்ப்புற தேர்தல் அறிவிப்பு 26.01.2022 அன்று அறிவிக்கப்பட்டதால் தேர்தல் நடத்தை விதிமுறைகள் அமுல்படுத்தப்பட்டு முடிவுற்றதால், தற்போது கோப்பின் மீது மேல்நடவடிக்கை எடுத்து சமர்ப்பிக்கப்படுகிறது. எனவே, குறைந்த ஒப்பந்தபுள்ளி அளித்த ஒப்பந்ததாரர்களின் விலை விவரப்பட்டியல் பின்வருமாறு:

**பே.சா.து.ந.க.எண்.பி4/4716/ 65/2021**

**உட்புற தார் சாலைகள் மேம்படுத்தும் பணி. (அட்டவணை-1)**

| S. No/ P.No | File No / BRR.C.No. | Package No | No.of participants | Name of the Contractor | Work Value Including GST | Quoted % |
|---|---|---|---|---|---|---|
| 1 | B4/4716/2021-65 | 65 | 2 | Sri Ram Constructions | 13945953.45 | (+)7.00% |

குறைந்த விலைப்புள்ளி அளித்த ஒப்பந்ததாரரின் ஒப்பப் புள்ளியானது 2021-22ம் ஆண்டு அலுவலக விலை விவரப்பட்டியலுடன் ஒப்பிடுகையில் அதிகமாக இருப்பதை கருத்தில் கொண்டு, குறைந்த ஒப்ப புள்ளி அளித்த ஒப்பந்ததாரரிடம் விலைக் குறைப்பு கோரி கடிதம் அளிக்கப்பட்டது. அதன்படி ஒப்பந்ததாரர்' விலைக்குறைப்பு செய்து கடிதம் அளித்துள்ளார். விலைக்குறைப்புக்கான ஒப்பத் தொகையின் விவரம் பின்வருமாறு பட்டியலிடப்படுகிறது.

**(அட்டவணை-2)**

| S. No/ P.No | File No / BRR.C.No. | Package No | Name of the Contractor | Work Value Including GST | Quoted Percentage | % Offered After Negotiations |
|---|---|---|---|---|---|---|
| 1 | B4/4716/2021-65 | 65 | Sri Ram Constructions | 13945953.45 | (+) 7.00% | (+) 5.00% |

மேற்கூறிப்பிட்டுள்ள ஒப்பந்ததாரர் பேச்சுவார்த்தைக்குப்பின் அளித்த ஒப்ப விகிதத்தை 2021-22ம் ஆண்டு அலுவலக விலை விவரப்பட்டியலுடன் ஒப்பிடுகையில் கூடுதலாக உள்ளதால் மேலும் விலைக்குறைப்பு கோரி ஒப்பந்த்தாரர்களுக்கு கடிதம் வழங்கப்பட்டது.

அதன்படி ஒப்பந்ததாரர்கள் விலைக்குறைப்பு செய்து கடிதம் அளித்துள்ளார்கள். விலைக்குறைப்புக்கான ஒப்பத் தொகையின் விவரம் பின்வருமாறு பட்டியலிடப்படுகிறது.

**(அட்டவணை-3)**

| S. No/ P.No | File No / BRR.C.No.B4/ | Package No | Name of the Contractor | Work Value Including GST | Quoted Percentage | % Offered 1st Negotiations | % Offered 2nd and Final Negotiations |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 4716/2021-65 | 65 | Sri Ram Constructions | 13945953.45 | (+) 7.00% | (+) 5.00% | (+)3.95% |

எனவே, இந்த ஒப்பம் சம்மந்தமாக கீழ்காணும் விவரங்கள் ஒப்பங்கள் கூர்ந்து ஆராயும் குழுமத்திற்கு சமர்பிக்கப்பட்டது.

1) இந்த ஒப்பந்தப்புள்ளியானது தகுதிவாய்ந்த ஒப்பந்ததாரர்கள் மின்னணு (e-tender) முறையில் கலந்து கொண்ட ஒப்பந்தப்புள்ளி ஆகும். சந்தை நிலவரத்தை கருத்தில் கொண்டால் குறைந்த விலைப்புள்ளி அளித்த ஒப்பந்ததாரர்கள் ஒப்பந்தத் தொகையானது ஏற்றுக் கொள்ளத்தக்க நிலையில் உள்ளது.
2) இத்திட்டத்தின் மூலம் சென்னை மாநகரில் உள்ள பெரும்பாலான சாலைகள் மேம்படுத்தப்படவுள்ளதாலும், அதற்கான மூலப்பொருள்கள் விலை, தொழிலாளர்கள் ஊதிய உயர்வு, மற்றும் போக்குவரத்து வாகன செலவு பெருகி உள்ளதாலும் அலுவலக விலையை விட ஒப்ப விலை அதிகமாக உள்ளது.
3) உலக சுகாதார நிறுவனம் கொரோனா வைரஸ் நோய் தொற்றைப்பற்றி உலகளாவிய நோய் தொற்றாக அறிவித்ததை தொடர்ந்து மத்திய அரசு மற்றும் மாநில அரசு கொரோனா வைரஸ் நோய் தொற்றை தடுப்பதற்காக தேசிய பேரிடர் மேலாண்மை சட்டம் அமல்படுத்தியதை தொடர்ந்து ஒப்பந்ததாரர்களிடம் பணிபுரியும் தொழிலாளர்கள் அவரவர்களது சொந்த ஊர்களுக்கு புலம் பெயர்ந்து சென்றுவிட்ட காரணத்தினால் இப்பணியினை செயல்படுத்த தொழிலாளர்கள் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளதை தொடர்ந்து இப்பணியில் ஈடுபடும் தொழிலாளர்களுக்கு அதிக ஊதியம் வழங்க வேண்டி உள்ளதாலும் மற்றும் தொழிலாளர்களுக்கு கொரோனா வைரஸ் நோய் தொற்றிலிருந்து பாதுகாப்பதற்கு தேவையான வசதிகளையும் ஏற்படுத்தி கொடுப்பது கூடுதல் நிதி சுமை ஏற்படுவதை கருத்தில் கொண்டு பணிகள் வழங்கலாம் எனக் கருதப்படுகிறது.

**பே.சா.து.ந.க.எண்.பி4/4716/ 65/2021**

மேற்குறிப்பிட்ட காரணங்களை கருத்தில் கொண்டு குறைந்த விலை விகிதம் அளித்த கீழ்க்கண்ட ஒப்பந்ததாரருக்கு பணியை வழங்க 24.02.2022 அன்று நடந்த ஒப்பங்கள் கூர்ந்து ஆராயும் குழுமம் கூட்டத்தில் பரிந்துரை வழங்கி உள்ளது.

**அட்டவணை - IV**

| S. No/ P.No (1) | File No / BRR.C.No. (2) | Package (3) | Name of the Bidder (L1) (4) | Amount after Negotiation (Rs.) (5) | 2021-22 (Schdule of rate)% Offered After Negotiation (6) |
|---|---|---|---|---|---|
| 1 | B4/4716/2021-65 | 65 | Sri Ram Constructions | 1,44,96,818.61 | (+)3.95% |

எனவே,

1) குறைந்த விலைப்புள்ளி அளித்த ஒப்பந்ததாரர்களுக்கு மேற்கண்ட அட்டவணை-3ல் கலம் எண் 6ல் உள்ள ஒப்ப புள்ளி சதவிகிதம் மற்றும் கலம் எண்.5ல் உள்ள ஒப்பத் தொகைக்கு (12% GST வரி சேர்த்து) பணியினை வழங்கவும்,
2) மேற்காணும் பணிகளுக்கான நிதியினை TURIF 2021-22ல் ஒப்பந்ததாரர்களுக்கு பட்டி தீர்வு செய்யவும்,

மேற்கண்ட 1 மற்றும் 2 ஆகிய இனங்களுக்கு சிறப்பு அதிகாரி - நிலைக்குழு (பணிகள்), நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களின் அனுமதி கோரிய முதன்மைச்செயலர்/ஆணையரது 25.02.2022 நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

**"1 மற்றும் 2 ஆகிய இனங்களுக்கு சிறப்பு அதிகாரி - நிலைக்குழு (பணிகள்), நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டது".**

* * * * * *

**பே.சா.து.ந.க.எண்.பி4/5261/2021**

**தீர்மானஎண். 159/2022** **நாள்:25-02-2022**

**பெருநகர சென்னை மாநகராட்சி - பேருந்து சாலைகள் துறை – மாநில பேரிடர் நிவாரண நிதியின் கீழ் (SDRF) - 247 எண்ணிக்கையிலான பேருந்து தட சாலைகள் மேம்படுத்தும் பணிக்கு, 17 சிப்பங்களாக ஒப்பங்கள் கோரப்பட்டது – குறைந்த விலைபுள்ளி அளித்த ஒப்பந்ததாரர்களுக்கு பணியினை அளிக்க அனுமதி.**

வடகிழக்கு பருவமழை 2021-னால் சேதமடைந்த உட் கட்டமைப்புகள் சீரமைக்கவும், நிவாரணங்கள் வழங்கவும் வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை, அரசாணை G.O(MS) No:802, நாள்:29/11/2021ன் படி நிதி ஒதுக்கப்பட்டது. இதில் பெருநகர சென்னை மாநகராட்சியில் ஏற்பட்ட பாதிப்புகளை சரி செய்ய ரூ.132 கோடி ஒதுக்கப்பட்டது.

பெருநகர சென்னை மாநகராட்சி மூலம் 387 கி.மீ நீளமுடைய 471 பேருந்து தட சாலைகள் மற்றும் 5270.36 கி.மீட்டர் நீளமுடைய 34,640 உட்புற சாலைகள் பராமரிக்கப்பட்டு வருகிறது.

சிறப்பு அதிகாரி (மன்றம்) தீர்மான எண்.13/2022, நாள்:06.01.2022ன்படி வடகிழக்கு பருவமழை 2021 பெய்த கனமழையின் காரணமாக சாலைகளில் ஏற்பட்டுள்ள சேதங்களை உடனடியாக சீர் செய்ய பகுதி-I ல் 17 சிப்பங்கள் மற்றும் பகுதி-IIல் 38 சிப்பங்களக பிரித்து ஒப்பங்கள் கோரியதற்கு பின்னேற்பு அனுமதி பெறப்பட்டுள்ளது.

மேற்கண்ட மன்றத் தீர்மானத்தின்படி, பகுதி-I ல் 247 எண்ணிக்கையிலான உட்புற சாலைகள் மேம்படுத்தும் பணிகள் மேற்கொள்ள 17 எண்ணிக்கையிலான சிப்பங்களாக பிரிக்கப்பட்டு, இதில் 14 எண்ணிக்கையிலான சிப்பங்களுக்கு சிறப்பு அதிகாரி (மன்றம்) அவர்களின் ஒப்புதல் பெற்று ஒப்பந்ததாரர்களுக்கு ஒப்ப ஏற்பு கடிதம் வழங்கப்பட்டுள்ளது. மீதமுள்ள 3 சிப்பங்களில் கலந்து கொண்ட ஒப்பந்ததாரர்கள் குறைந்த விலைப்புள்ளி அளிக்காத காரணத்தினால் இவர்களது ஒப்பம் நிராகரிப்பட்டு, குறுகிய கால மறு ஒப்பம் "இரண்டு உறைகள்" என்ற முறையில் ஒப்பம் இறுதி நாள் 03.02.2022 என ஒப்ப அறிவிப்பு ஆங்கில நாளிதழ் "Deccan Chronicle", தமிழ் நாளிதழ் "தினத்தந்தி" 25.01.2022 நாளிட்ட நாளிதழ் 27.01.2022 அன்று பெருநகர சென்னை மாநகராட்சி ஒப்பந்தப்புள்ளி செய்தி மலரிலும் மாநில ஒப்பந்தபுள்ளி செய்தி மலரிலும் பிரசுரிக்கப்பட்டது.

ஒப்ப நாளான 03.02.2022 அன்று தொழில் நுட்ப ஆவணம் கலந்து கொண்ட ஒப்பந்ததாரர்கள் முன்னிலையில் திறக்கப்பட்டது. தொழில்நுட்ப ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டு தகுதி வாய்ந்த ஒப்பந்ததாரர்கள் தேர்வு செய்யப்பட்டார்கள் எனவே, தகுதி வாய்ந்த ஒப்பந்ததாரர்களின் நிதி ஆவணம் 24.02.2022 அன்று திறக்கப்பட்டது. உள்ளாட்சி மற்றும் நகர்ப்புற தேர்தல் அறிவிப்பு 26.01.2022 அன்று அறிவிக்கப்பட்டதால் தேர்தல் நடத்தை விதிமுறைகள் அமுல்படுத்தப்பட்டு முடிவுற்றதால், தற்போது கோப்பின் மீது மேல்நடவடிக்கை எடுத்து சமர்ப்பிக்கப்படுகிறது. எனவே, குறைந்த ஒப்பந்தபுள்ளி அளித்த ஒப்பந்ததாரர்களின் விலை விவரப்பட்டியல் பின்வருமாறு:

**உட்புற சாலைகள் மேம்படுத்தும் பணி. (அட்டவணை-I)**

| S. No (1) | File No / BRR.C.No. (2) | Package (3) | No.of Bidder Participated (4) | Name of the Bidder (L1) (5) | Work Value Including GST (Rs.) (6) | Quoted % (7) |
|---|---|---|---|---|---|---|
| 1 | பி4/5261/2021-2 | 2 | 2 | JDS ENTERPRISES | 7856744.10 | (+) 5.00% |
| 2 | பி4/5261/2021-3 | 3 | 2 | JDS ENTERPRISES | 10076528.65 | (+) 5.00% |
| 3 | பி4/5261/2021-4 | 4 | 2 | JDS ENTERPRISES | 11108260.88 | (+) 5.00% |

**பே.சா.து.ந.க.எண்.பி4/5261/2021**

குறைந்த விலைப்புள்ளி அளித்த ஒப்பந்ததாரரின் ஒப்பப் புள்ளியானது 2021-22ம் ஆண்டு அலுவலக விலை விவரப்பட்டியலுடன் ஒப்பிடுகையில் அதிகமாக இருப்பதை கருத்தில் கொண்டு, குறைந்த ஒப்பபுள்ளிகள் அளித்த ஒப்பந்ததாரர்களிடம் விலைக் குறைப்பு கோரி கடிதம் அளிக்கப்பட்டது. அதன்படி ஒப்பந்ததாரர்கள் விலைக்குறைப்பு செய்து கடிதம் அளித்துள்ளார்கள். விலைக்குறைப்புக்கான ஒப்பத் தொகையின் விவரம் பின்வருமாறு பட்டியலிடப்படுகிறது.

**(அட்டவணை-II)**

| S. No (1) | File No / BRR.C.No. (2) | Package (3) | Name of the Bidder (L1) (5) | Work Value Including GST (6) | Quoted % (7) | % Offered After Negotiation (8) |
|---|---|---|---|---|---|---|
| 1 | பி4/5261/2021-2 | 2 | JDS ENTERPRISES | 7856744.10 | (+) 5.00% | (+) 4.00% |
| 2 | பி4/5261/2021-3 | 3 | JDS ENTERPRISES | 10076528.65 | (+) 5.00% | (+) 4.00% |
| 3 | பி4/5261/2021-4 | 4 | JDS ENTERPRISES | 11108260.88 | (+) 5.00% | (+) 4.00% |

மேற்கூறிப்பிட்டுள்ள ஒப்பந்ததாரர்கள் அனைவரும் பேச்சுவார்த்தைக்குப்பின் அளித்த ஒப்ப விகிதத்தை 2021-22ம் ஆண்டு அலுவலக விலை விவரப்பட்டியலுடன் ஒப்பிடுகையில் கூடுதலாக உள்ளதால் மேலும் விலைக்குறைப்பு கோரி ஒப்பந்ததாரர்களுக்கு கடிதம் வழங்கப்பட்டது.

அதன்படி ஒப்பந்ததாரர்கள் விலைக்குறைப்பு செய்து கடிதம் அளித்துள்ளார்கள். விலைக்குறைப்புக்கான ஒப்பத் தொகையின் விவரம் பின்வருமாறு பட்டியலிடப்படுகிறது.

**(அட்டவணை-III)**

| S. No/ P.No | File No / BRR.C.No.B/ | Package No | Name of the Contractor | Work Value Including GST | Quoted Percentage | % Offered 1st Negotiations | % Offered 2nd and Final Negotiations |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 5261/ 2021-1 | 2 | JDS ENTERPRISES | 7856744.10 | (+) 5.00% | (+) 4.00% | (+) 3.90% |
| 2 | 5261/ 2021-5 | 3 | JDS ENTERPRISES | 10076528.65 | (+) 5.00% | (+) 4.00% | (+) 3.95% |
| 3 | 5261/ 2021-6 | 4 | JDS ENTERPRISES | 11108260.88 | (+) 5.00% | (+) 4.00% | (+) 3.92% |

எனவே, இந்த ஒப்பங்கள் சம்மந்தமாக கீழ்காணும் விவரங்கள் ஒப்பங்கள் கூர்ந்து ஆராயும் குழுமத்திற்கு சமர்பிக்கப்பட்டது.

1) இந்த ஒப்பந்தப்புள்ளியானது தகுதிவாய்ந்த ஒப்பந்ததாரர்கள் மின்னணு (e-tender) முறையில் கலந்து கொண்ட ஒப்பந்தப்புள்ளி ஆகும்.
2) இத்திட்டத்தின் மூலம் சென்னை மாநகரில் உள்ள பெரும்பாலான சாலைகள் மேம்படுத்தப்படவுள்ளதாலும், அதற்கான மூலப்பொருள்கள் விலை, தொழிலாளர்கள் ஊதிய உயர்வு, மற்றும் போக்குவரத்து வாகன செலவு பெருகி உள்ளதாலும் அலுவலக விலையை விட ஒப்ப விலை அதிகமாக உள்ளது. கொரோனா வைரஸ் நோய் தொற்றிலிருந்து பாதுகாப்பதற்கு தேவையான வசதிகளை தொழிலாளர்களுக்கு ஏற்படுத்தி கொடுப்பது கூடுதல் நிதி சுமை ஏற்படுவதை கருத்தில் கொண்டும் பணிகள் வழங்கலாம் எனக் கருதப்படுகிறது.

மேற்குறிப்பிட்ட காரணங்களை கருத்தில் கொண்டு குறைந்த விலை விகிதம் அளித்த கீழ்க்கண்ட ஒப்பந்ததாரர்களுக்கு பணியை வழங்க 24.02.2022 அன்று நடந்த ஒப்பங்கள் கூர்ந்து ஆராயும் குழுமம் கூட்டத்தில் பரிந்துரை வழங்கி உள்ளது.

**பே.சா.து.ந.க.எண்.பி4/5261/2021**

**அட்டவணை - IV**

| S. No/ P.No (1) | File No / BRR.C.No. (2) | Package (3) | Name of the Bidder (L1) (4) | Amount after Negotiation (Rs.) (5) | 2021-22 (Schedule of rate)% Offered After Negotiation (6) |
|---|---|---|---|---|---|
| 1 | பி4/5261/2021-2 | 2 | JDS ENTERPRISES | 8163157.12 | (+) 3.90% |
| 2 | பி4/5261/2021-3 | 3 | JDS ENTERPRISES | 10474551.53 | (+) 3.95% |
| 3 | பி4/5261/2021-4 | 4 | JDS ENTERPRISES | 11543704.71 | (+) 3.92% |

எனவே,

1) குறைந்த விலைப்புள்ளி அளித்த ஒப்பந்ததாரர்களுக்கு மேற்கண்ட அட்டவணை-4ல் கலம் எண் 6ல் உள்ள ஒப்ப புள்ளி சதவிகிதம் மற்றும் கலம் எண்.5ல் உள்ள ஒப்பத் தொகைக்கு (12% GST வரி சேர்த்து) பணியினை வழங்கவும்,

2) மேற்காணும் பணிகளுக்கான மாநில பேரிடர் நிவாரண நிதியில் (SDRF) ஒப்பந்ததாரர்களுக்கு பட்டி தீர்வு செய்யவும்,

மேற்கண்ட 1 மற்றும் 2 ஆகிய இனங்களுக்கு சிறப்பு அதிகாரி - நிலைக்குழு (பணிகள்), நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களின் அனுமதி கோரிய முதன்மைச்செயலர்/ஆணையரது 25.02.2022 நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

**"1 மற்றும் 2 ஆகிய இனங்களுக்கு சிறப்பு அதிகாரி - நிலைக்குழு (பணிகள்), நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டது".**

******

**S.P.D.C.No B1/1612/2019**

**Resolution No.160/2022** **Date:25-02-2022**

**Greater Chennai Corporation – Special Projects Department – St+Art Foundation- Street Art at Kannagi Nagar- Proposal received for 3rd Edition of Kannagi Art District Festival- 6 wall murals and community engagement activities – Festival duration 45 days - Cost estimate for GCC Rs. 33,17,000- To be implemented by Zone 15 – Regional Office South – For approval.**

Greater Chennai Corporation, Chennai Smart City Limited and St+Art India Foundation had previously collaborated for an Art District at Kannagi Nagar (Zone 15) in the year 2020, vide Special Officer, Council Resolution No.626/2019, dated 15.10.2019. Further, the project also included the Namma Chennai typography at Marina promenade (Zone 9). The first edition of this Art Festival included providing wall murals at Tamil Nadu Slum Clearance Board (TNSCB) tenements and a typographic installation, at a total cost of Rs. 77 lakhs funded by Chennai Smart City Limited.

In 2020, 9 murals were completed between Jan-Feb, and the typography and 3 murals were pending. Since the project was stalled due to the COVID pandemic, St+Art India Foundation completed the pending works in February 2021 as the 2nd edition of the Kannagi Nagar Art District Festival.

Currently, St+Art India Foundation has proposed a 3rd edition of the Kannagi Nagar Art District Festival, vide mail. It includes the approach and concept for 6 more wall murals and community engagement workshops. The 6 murals would cover a surface area of 12,435.6 sq ft., done by a crew of 16 persons, including 6 major artists, 6 assistants, a project manager and 3 production managers.

The scope of work includes artistic design, conceptualization, preparation of wall in TNSCB tenements, preparation of typography, lighting works and the logistical requirements of accommodation and travel of the artists and project team at St+Art India Foundation.

The scope of work is to be shared between GCC and St+Art India Foundation. The estimated cost for GCC for the 3rd Edition is Rs.33,17,000 (Thirty-three lakhs and seventeen thousand only). The estimated project duration is for 45 days. The fund may be allocated from GCC's General Fund. The project sanction and implementation of day-to-day activities may be done by the Regional Office (South).

A draft Memorandum of Understanding between St+Art India Foundation and Greater Chennai Corporation is proposed to the same effect.

Hence,

1. To approve the proposal for the 3rd edition of the Kannagi Nagar Art Festival in collaboration with St+Art India Foundation, at an estimated cost of Rs.33,17,000 (Thirty-three lakhs and seventeen thousand) for GCC's scope of work. The works are to be implemented by the Zone 15 Office and Regional Office South.
2. If approved, the Memorandum of Understanding between St+Art India Foundation and Greater Chennai Corporation may please be signed.

Sl.No.1 & 2 above, orders of the Special Officer - Standing Committee (Works), Standing Committee (Taxation and Finance) and Council are requested. Principal Secretary/Commissioner's Note dated.25.02.2022 is read.

**"Sl.No. 1 & 2 are approved by Special Officer-Standing Committee (Works), Standing Committee (Taxation and Finance) and Council."**

******

**பே.சா.து.ந.க.எண்.பி4/0295/2022**

**தீர்மானஎண். 161/2022** **நாள்:26-02-2022**

**பெருநகர சென்னை மாநகராட்சி - பேருந்து சாலைகள் துறை - சிங்கார சென்னை 2.0 திட்டத்தின்கீழ்–பல்வேறு மண்டலங்களில் உள்ள உட்புற சாலைகள் மற்றும் பேருந்து தட சாலைகளில் சாலை பெயர் பலகைகளில் (Street Name Boards) அமைந்துள்ள பழைய பெயர் பலகைகளை நீக்கி புதிதாக டிஜிட்டல் பெயர் பலகைகளாக மாற்றி அமைக்கும் பணிக்கு 9 எண்ணிகையிலான சிப்பங்களாக ஒப்பம் கோரப்பட்டது- குறைந்த விலைபுள்ளி அளித்த ஒப்பந்ததாரர்களுக்கு பணியினை வழங்க அனுமதி.**

பெருநகர சென்னை மாநகராட்சி பகுதிகளில் உலகதரத்திற்கு நவீன கட்டமைப்புகள் மற்றும் சேவை மேற்கொள்வதற்கு மேதகு ஆளுனர் உரையில் சிங்கார சென்னை *2.0* என்ற திட்டம் அறிவிக்கப்பட்டது. *24.08.2021* அன்று தமிழக சட்டப்பேரவையில் நடந்த விவாதத்தின் போது மாண்புமிகு நகர்புற நகராட்சி நிர்வாக அமைச்சர் அவர்கள் கீழ்கண்டவாறு அறிவிப்பு வெளியிட்டார், “பெருநகர சென்னை மாநகராட்சியுடன் இணைக்கப்பட்ட ***42*** உள்ளாட்சி அமைப்புகளில் அடிப்படை கட்டமைப்பு வசதிகள் சரியான முன்னேற்றம் இல்லாததால், இக்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்தவும் சென்னை மாநகர கட்டமைப்பை சர்வதேச தரத்திற்கு உயர்த்தும் நோக்கில் சிங்கார சென்னை ***2.0*** என்னும் புதிய திட்டம் இவ்வரசால் தீட்டப்பட்டு, இவ்வாண்டு ரூ.***500*** கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இத்துடன், வேறு பல திட்டங்களை இணைத்து இப்பெருநகர சென்னை மாநகராட்சியில் பல்வேறு உட்கட்டமைப்பு பணிகள் மற்றும் சேவைகள் மேற்கொள்ளப்படவுள்ளன”.

சிங்கார சென்னை ***2.0*** என்ற திட்டத்தின் கீழ் பல்வேறு பணிகள் மேற்கொள்ள திட்டமிடப்பட்டது. கூடுதல் தலைமை செயலாளர், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அவர்கள் தலைமையில் உள்ள சிங்கார சென்னை ***2.0*** திட்டப்பணிகள் ஒப்புதல் வழங்குதல் மற்றும் கண்காணிப்பு குழுவில் *(Project Sanctioning and Monitoring Committee)* கூடுதல் தலைமை செயலர் (நிதித்துறை), பெருநகராட்சி ஆணையர் மற்றும் சென்னை குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீர் அகற்றல் துறை தலைவர் (ம) நிர்வாக இயக்குநர் உறுப்பினர்கள் ஆவார்கள். தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர் *TUFIDCO* அவர்கள் இக்குழுவின் ஒருங்கிணைப்பாளர் *(Convener)* ஆவார்கள்.

*11.01.2022* அன்று நடைபெற்ற திட்ட ஒப்புதல் அளித்தல் மற்றும் கண்காணிப்பு குழு *(Project Sanctioning and Monitoring Committee)* கூட்ட அறிக்கையின் படி *2021-2022* சிங்கார சென்னை *2.0* திட்டத்தின் கீழ் பெருநகர சென்னை மாநகராட்சியில் பல்வேறு மண்டலங்களில் உள்ள உட்புற சாலைகள் மற்றும் பேருந்து தட சாலைகளில் சாலை பெயர் பலகைகளில் *(Street Name Boards)* அமைந்துள்ள பழைய பெயர் பலகைகளை நீக்கி புதிதாக டிஜிட்டல் பெயர் பலகைகளாக மாற்றி அமைக்கும் பணிக்கு *9* எண்ணிகையிலான சிப்பங்களுக்கு ரூ*8.43* கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ள ஒப்புதல் வழங்கப்பட்டு சிப்பங்களாக பிரித்து ஒப்பந்த புள்ளிகள் கோரப்பட்டது.

மேற்கண்ட திட்ட ஒப்புதல் அளித்தல் மற்றும் கண்காணிப்பு குழு *(Project Sanctioning and Monitoring Committee)* கூட்ட அறிக்கையின் படி *2021-2022* சிங்கார சென்னை *2.0* திட்டத்தின் கீழ் பல்வேறு மண்டலங்களில் உள்ள உட்புற சாலைகள் மற்றும் பேருந்து தட சாலைகளில் பெயர் பலகைகளில் *(Street Name Boards)* அமைந்துள்ள பழைய பெயர் பலகைகளை நீக்கி புதிதாக டிஜிட்டல் பெயர் பலகைகளாக மாற்றி அமைக்கும் பணிக்கு மேற்கொள்ள *9* எண்ணிக்கையிலான சிப்பங்களாக பிரிக்கப்பட்டு, ஒப்பங்கள் “இரண்டு உறைகள்” என்ற முறையில் ஒப்பம் இறுதி நாள்.*31.01.2022* என ஒப்ப அறிவிப்பு ஆங்கில நாளிதழ் *“ Deccan Chronicle”* , தமிழ் நாளிதழ் “மாலை முரசு” *20.01.2022* நாளிட்ட நாளிதழ் *20.01.2022* அன்று பெருநகர சென்னை மாநகராட்சி ஒப்பந்தப்புள்ளி செய்தி மலரிலும் பிரசுரிக்கப்பட்டது. மேலும், நிர்வாக நலன் கருதி ஒப்பம் சமர்பிக்க வேண்டிய நாள் *31.01.2022* லிருந்து *10.02.2022* என்றும், ஒப்ப திறப்பு நாள் *01.02.2022* லிருந்து *11.02.2022* என்று மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

**பே.சா.து.ந.க.எண்.பி4/0295/2022**

ஒப்ப நாளான 11.02.2022 அன்று தொழில் நுட்ப ஆவணம் கலந்து கொண்ட ஒப்பந்ததாரர்கள் முன்னிலையில் திறக்கப்பட்டது. தொழில்நுட்ப ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டு தகுதி வாய்ந்த ஒப்பந்ததாரர்கள் தேர்வு செய்யப்பட்டார்கள். உள்ளாட்சி மற்றும் நகரப்புற தேர்தல் அறிவிப்பு 26.01.2022 அன்று அறிவிக்கப்பட்டதால் தேர்தல் நடத்தை விதிமுறைகள் அமுல்படுத்தப்பட்டு முடிவுற்றதால், தற்போது கோப்பின் மீது மேல்நடவடிக்கை எடுத்து சமர்ப்பிக்கப்படுகிறது. எனவே, தகுதி வாய்ந்த ஒப்பந்ததாரர்களின் நிதி ஆவணம் 25.02.2022 அன்று திறக்கப்பட்டது. குறைந்த ஒப்பந்தபுள்ளி அளித்த ஒப்பந்ததாரர்களின் விலை விவரப்பட்டியல் பின்வருமாறு:

**பேருந்து சாலைகள் மேம்படுத்தும் பணி. (அட்டவணை-I)**

| S. No (1) | File No / BRR.C.No. (2) | Package (3) | No.of Bidder Participated (4) | Name of the Bidder (L1) (5) | Work Value Including GST (Rs.) (6) | Quoted % (7) |
|---|---|---|---|---|---|---|
| 1 | B4/0295/2022-1 | 1 | 4 | SBA Infratech Service Private Ltd | 10517715.31 | (+) 4.00 |
| 2 | B4/0295/2022-2 | 2 | 3 | SBA Infratech Service Private Ltd | 7275132.17 | (+) 4.80 |
| 3 | B4/0295/2022-3 | 3 | 3 | SBA Infratech Service Private Ltd | 13813357.80 | (+) 4.80 |
| 4 | B4/0295/2022-4 | 4 | 3 | SBA Infratech Service Private Ltd | 9295345.99 | (+) 4.00 |
| 5 | B4/0295/2022-5 | 5 | 3 | SBA Infratech Service Private Ltd | 6987788.37 | (+) 4.00 |
| 6 | B4/0295/2022-6 | 6 | 3 | SBA Infratech Service Private Ltd | 6232024.56 | (+) 4.80 |
| 7 | B4/0295/2022-7 | 7 | 6 | SBA Infratech Service Private Ltd | 8730305.70 | (+) 4.80 |
| 8 | B4/0295/2022-8 | 8 | 5 | SBA Infratech Service Private Ltd | 11163288.46 | (+) 4.00 |
| 9 | B4/0295/2022-9 | 9 | 5 | SBA Infratech Service Private Ltd | 6977783.12 | (+) 4.00 |

குறைந்த விலைப்புள்ளி அளித்த ஒப்பந்ததாரரின் ஒப்பப் புள்ளியானது 2021-22ம் ஆண்டு அலுவலக விலை விவரப்பட்டியலுடன் ஒப்பிடுகையில் அதிகமாக இருப்பதை கருத்தில் கொண்டு, குறைந்த ஒப்ப புள்ளிகள் அளித்த ஒப்பந்ததாரர்களிடம் விலைக் குறைப்பு கோரி கடிதம் அளிக்கப்பட்டது. அதன்படி ஒப்பந்ததாரர்கள் விலைக்குறைப்பு செய்து கடிதம் அளித்துள்ளார்கள். விலைக்குறைப்புக்கான ஒப்பத் தொகையின் விவரம் பின்வருமாறு பட்டியலிடப்படுகிறது.

**(அட்டவணை-II)**

| S. No (1) | File No / BRR.C.No. (2) | Package (3) | No.of Bidder Participated (4) | Name of the Bidder (L1) (5) | Work Value Including GST (6) | Quoted % (7) | % Offered After Negotiation (8) |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | B4/0295/2022-1 | 1 | 4 | SBA Infratech Service Private Ltd | 10517715.31 | (+) 4.00 | (-)0.10 |
| 2 | B4/0295/2022-2 | 2 | 3 | SBA Infratech Service Private Ltd | 7275132.17 | (+) 4.80 | (-)0.30 |
| 3 | B4/0295/2022-3 | 3 | 3 | SBA Infratech Service Private Ltd | 13813357.80 | (+) 4.80 | (-)0.10 |
| 4 | B4/0295/2022-4 | 4 | 3 | SBA Infratech Service Private Ltd | 9295345.99 | (+) 4.00 | (-)0.20 |
| 5 | B4/0295/2022-5 | 5 | 3 | SBA Infratech Service Private Ltd | 6987788.37 | (+) 4.00 | (-)0.30 |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 6 | B4/0295/2022-6 | 6 | 3 | SBA Infratech Service Private Ltd | 6232024.56 | (+) 4.80 | (-)0.30 |
| 7 | B4/0295/2022-7 | 7 | 6 | SBA Infratech Service Private Ltd | 8730305.70 | (+) 4.80 | (-)0.20 |
| 8 | B4/0295/2022-8 | 8 | 5 | SBA Infratech Service Private Ltd | 11163288.46 | (+) 4.00 | (-)0.10 |
| 9 | B4/0295/2022-9 | 9 | 5 | SBA Infratech Service Private Ltd | 6977783.12 | (+) 4.00 | (-)0.20 |

மேற்கூறிப்பிட்டுள்ள ஒப்பந்ததாரர்கள் அனைவரும் பேச்சுவார்த்தைக்குப்பின் அளித்த ஒப்ப விகிதத்தை 2021-22ம் ஆண்டு அலுவலக விலை விவரப்பட்டியலுடன் ஒப்பிடுகையில் குறைவாக உள்ளது. இதற்கு மேலும் ஒப்பந்ததாரர்கள் விலைக்குறைப்பு செய்ய இயலாது எனத் தெரிவித்துள்ளார்கள்.

எனவே, இந்த ஒப்பம் சம்மந்தமாக கீழ்காணும் விவரங்கள் ஒப்பங்கள் கூர்ந்து ஆராயும் குழுமத்திற்கு சமர்பிக்கப்பட்டது.

1) இந்த ஒப்பந்தப்புள்ளியானது தகுதிவாய்ந்த ஒப்பந்ததாரர்கள் மின்னனு (e-tender) முறையில் கலந்து கொண்ட ஒப்பந்தப்புள்ளி ஆகும். சந்தை நிலவரத்தை கருத்தில் கொண்டால் குறைந்த விலைப்புள்ளி அளித்த ஒப்பந்ததாரர்கள் ஒப்பந்தத் தொகையானது ஏற்றுக் கொள்ளத்தக்க நிலையில் உள்ளது.
2) இத்திட்டத்தின் மூலம் சென்னை மாநகரில் உள்ள பெரும்பாலான சாலைகள் மேம்படுத்தப்படவுள்ளதாலும், அதற்கான மூலப்பொருள்கள் விலை, தொழிலாளர்கள் ஊதிய உயர்வு, மற்றும் போக்குவரத்து வாகன செலவு பெருகி உள்ளதாலும் அலுவலக விலையை விட ஒப்ப விலை அதிகமாக உள்ளது. கொரோனா வைரஸ் நோய் தொற்றிலிருந்து பாதுகாப்பதற்கு தேவையான வசதிகளை தொழிலாளர்களுக்கு ஏற்படுத்தி கொடுப்பது கூடுதல் நிதி சுமை ஏற்படுவதை கருத்தில் கொண்டும் பணிகள் வழங்கலாம் எனக் கருதப்படுகிறது.

மேற்குறிப்பிட்ட காரணங்களை கருத்தில் கொண்டு குறைந்த விலை விகிதம் அளித்த கீழ்க்கண்ட ஒப்பந்ததாரர்களுக்கு பணியை வழங்க 25.02.2022 அன்று நடந்த ஒப்பங்கள் கூர்ந்து ஆராயும் குழுமம் கூட்டத்தில் பரிந்துரை வழங்கி உள்ளது.

**அட்டவணை - III**

| S. No/ P.No (1) | File No / BRR.C.No. (2) | Package (3) | Name of the Bidder (L1) (4) | 2021-22 (Schdule of rate)% Offered After Negotiation (5) | Amount after Negotiation (Rs.) (6) |
|---|---|---|---|---|---|
| 1 | B4/0295/2022-1 | 1 | SBA Infratech Service Private Ltd | (-)0.10 | 10507197.59 |
| 2 | B4/0295/2022-2 | 2 | SBA Infratech Service Private Ltd | (-)0.30 | 7253306.77 |
| 3 | B4/0295/2022-3 | 3 | SBA Infratech Service Private Ltd | (-)0.10 | 13799544.44 |
| 4 | B4/0295/2022-4 | 4 | SBA Infratech Service Private Ltd | (-)0.20 | 9276755.30 |
| 5 | B4/0295/2022-5 | 5 | SBA Infratech Service Private Ltd | (-)0.30 | 6966825.00 |
| 6 | B4/0295/2022-6 | 6 | SBA Infratech Service Private Ltd | (-)0.30 | 6213328.49 |
| 7 | B4/0295/2022-7 | 7 | SBA Infratech Service Private Ltd | (-)0.20 | 8712845.09 |
| 8 | B4/0295/2022-8 | 8 | SBA Infratech Service Private Ltd | (-)0.10 | 11152125.17 |
| 9 | B4/0295/2022-9 | 9 | SBA Infratech Service Private Ltd | (-)0.20 | 6963827.55 |

**பே.சா.து.ந.க.எண்.பி4/0295/2022**

எனவே,

1) குறைந்த விலைப்புள்ளி அளித்த ஒப்பந்ததாரர்களுக்கு மேற்கண்ட அட்டவணை-3ல் கலம் எண் 5ல் உள்ள ஒப்ப புள்ளி சதவிகிதம் மற்றும் கலம் எண்.6ல் உள்ள ஒப்பத் தொகைக்கு (12% GST வரி சேர்த்து) பணியினை வழங்கவும்,

2) மேற்காணும் பணிகளுக்கான நிதியினை *Singara Chennai 2.0*ல் ஒப்பந்ததாரர்களுக்கு பட்டி தீர்வு செய்யவும்,

மேற்கண்ட 1 மற்றும் 2 ஆகிய இனங்களுக்கு சிறப்பு அதிகாரி - நிலைக்குழு (பணிகள்), நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களின் அனுமதி கோரிய முதன்மைச்செயலர்/ஆணையரது 26.02.2022 நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

**"1 மற்றும் 2 ஆகிய இனங்களுக்கு சிறப்பு அதிகாரி - நிலைக்குழு (பணிகள்), நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டது".**

* * * * * *

**S.P.D.C.No. B1/01461/2019**

**Resolution No.162/2022** **Date:26-02-2022**

**Greater Chennai Corporation – Special Projects Department – "Model & SMART Corporation Schools in Chennai" under CITIIS Challenge Initiative – New Chennai School Branding and Logo - Technical Committee-Academic Activities Approved – For approval.**

CITIIS (City Investments To Innovate, Integrate and Sustain) is the main component of the 'Program to fund Smart City projects through a Challenge Process' launched by the Ministry of Housing and Urban Affairs (MoHUA) in July 2018. The CITIIS Challenge is a collaborative effort of MoHUA, AFD (France) and European Union (EU). National Institute of Urban Affairs (NIUA), New Delhi is the Program Management Unit handling the CITIIS Program.

Under the CITIIS component, from over 65 proposals around the country, 12 projects including the "Model & SMART Corporation Schools in Chennai" proposal by Chennai Smart City Limited (CSCL) have been selected, vide D.O Letter dated 07.02.2019 from Director, Smart Cities, MoHUA. The project envisages a complete transformation of selected GCC schools across various components such as Physical Infrastructure, Digital Infrastructure, Teaching Pedagogy, Teacher Training, Sports & Extra Curriculars etc. It is a multidimensional project with niche features under each component, which shall be transformed holistically.

The total project outlay is Rs.95.25 Cr, out of which Rs. 19.05 Cr (20%) is being borne by the SPV (CSCL). The remaining Rs. 76.2 Cr (80%) is a loan funded by AFD received as a grant by CSCL for this project purpose, with a commitment of repayment of 50% by the Govt. of Tamil Nadu and Govt. of India respectively vide Government Order G.O (D) No. 351 dated 03.09.2019.

A Technical Committee for Academic Activities was appointed to review, scrutinize and approve the academic subcomponents of the project vide orders of Commissioner dated.20.10.2020 appointing Technical Committee. Subsequently, A Communication Outreach Plan and the Detailed Project Report were submitted to NIUA and approvals were received vide Endorsement of 'Communications and Outreach Plan' for the 'Model and Smart Corporation Schools in Chennai' under CITIIS-Email dated 05.01.2021 and Minutes of the 1st Special Apex Committee Meeting of the CITIIS Program under c/o Joint Secretary, MoHUA, GoI held on 18.01.2021.

One of the main aims of the Communication Outreach Plan under the CITIIS project is to rebrand and promote the schools under the administration of Greater Chennai Corporation as an educational destination. As part of this, branding schemes were designed including a common Brand Name for all the Schools of Greater Chennai Corporation viz. "The Chennai School" in English and "சென்னை பள்ளி" in Tamil Language.

More than ten different types of logos were developed by GCC/ Chennai Smart City Limited, with both English and Tamil versions. The English version has the caption "Towards Excellence in Education and Holistic Development" and the Tamil version has the caption "**முதல்தர கல்வி முழுமையான வளர்ச்சி**" and are attached herewith.

The proposals were placed before the Technical Committee – Academic activities. The Technical Committee after deliberation, recommended the 3rd option in the list for adoption as the official logo.

**S.P.D.C.No. B1/01461/2019**

The selected logo design depicts a child with a book. When the book is rotated at $90^o$, a pen nib will be visible. The child infographic used is gender neutral. Two colours are used in the logo, one is dark blue which is the brand theme colour of Greater Chennai Corporation and the other one is yellow which depicts bright future and happiness. Along with the logo the branding guidelines on how the logo should be used is also attached - 1) A label design of the logo for Primary School, Middle School, High School and Higher Secondary School are provided. 2) The multicolour, black and greyscale version are also provided in the guidelines with the colour code.

Hence,

1) To approve the selected Logo for the Schools under the administration of Greater Chennai Corporation.
2) To approve "The Chennai School" as a common brand name for all the Schools under the administration of Greater Chennai Corporation.
3) To establish the logo in all the schools of Greater Chennai Corporation.
4) To approve the English caption of the logo "Towards Excellence in Education and Holistic Development"
5) To approve the Tamil caption of the logo "**முதல்தர கல்வி முழுமையான வளர்ச்சி**"

Sl.No.1 to 5 above, orders of the Special Officer - Standing Committee (Works), Standing Committee (Taxation and Finance) and Council are requested. Principal Secretary/Commissioner's Note dated.26.02.2022 is read.

**"Sl.No. 1 to 5 are approved by Special Officer-Standing Committee (Works), Standing Committee (Taxation and Finance) and Council."**

* * * * * *

**பூ.து.ந.க.எண்.பி2/2022-4/2021**

**தீர்மான எண். 163/2022** **நாள்:28-02-2022**

**பெருநகர சென்னை மாநகராட்சி – பூங்கா துறை - ஒப்பந்தப்புள்ளி - "சிங்கார சென்னை 2.0" திட்டத்தின் கீழ் மாநகராட்சிக்கு உட்பட்ட காலியாக உள்ள திறந்தவெளி நிலங்களில் புதிய பூங்காக்கள் மற்றும் விளையாட்டுத் திடல்கள் அமைக்கவும் மற்றும் ஏற்கனவே உள்ள பூங்காக்கள் மற்றும் விளையாட்டுத்திடல்களை மேம்படுத்தும் பணிகளுக்கு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது - குறைந்த விலைப்புள்ளி அளித்த ஒப்பந்ததாரர்களுக்கு பணியினை அளிக்க அனுமதி.**

பெருநகர சென்னை மாநகராட்சி பகுதிகளில் உலகதரத்திற்கு நவீன கட்டமைப்புகள் மற்றும் சேவை மேற்கொள்வதற்கு மேதகு ஆளுநர் உரையில் சிங்கார சென்னை 2.0 என்ற திட்டம் அறிவிக்கப்பட்டது. 24.08.2021 அன்று தமிழக சட்டப்பேரவையில் நடந்த விவாதத்தின் போது மாண்புமிகு நகர்புற நகராட்சி நிர்வாக அமைச்சர் அவர்கள் கீழ்கண்டவாறு அறிவிப்பு வெளியிட்டார், "பெருநகர சென்னை மாநகராட்சியுடன் இணைக்கப்பட்ட 42 உள்ளாட்சி அமைப்புகளில் அடிப்படை கட்டமைப்பு வசதிகள் சரியான முன்னேற்றம் இல்லாததால், இக்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்தவும் சென்னை மாநகர கட்டமைப்பை சர்வதேச தரத்திற்கு உயர்த்தும் நோக்கில் சிங்கார சென்னை 2.0 என்னும் புதிய திட்டம் இவ்வரசால் தீட்டப்பட்டு, இவ்வாண்டு ரூ.500 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இத்துடன், வேறு பல திட்டங்களை இணைத்து இப்பெருநகர சென்னை மாநகராட்சியில் பல்வேறு உட்கட்டமைப்பு பணிகள் மற்றும் சேவைகள் மேற்கொள்ளப்படவுள்ளன ".

சிங்கார சென்னை 2.0 என்ற திட்டத்தின் கீழ் பல்வேறு பணிகள் மேற்கொள்ள கூடுதல் தலைமை செயலாளர், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அவர்கள் தலைமையில் உள்ள சிங்கார சென்னை 2.0 திட்டப்பணிகள் ஒப்புதல் வழங்குதல் மற்றும் கண்காணிப்பு குழுவில் *(Project Sanctioning and Monitoring Committee)* கூடுதல் தலைமை செயலர் (நிதித்துறை), பெருநகர சென்னை மாநகராட்சி முதன்மை செயலர் / ஆணையர் மற்றும் சென்னை குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீர் அகற்றல் துறையின் நிர்வாக இயக்குநர் ஆகியோர் உறுப்பினர்கள் ஆவார்கள். தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர் *TUFIDCO* அவர்கள் இக்குழுவின் ஒருங்கிணைப்பாளர் *(Convener)* ஆவார்கள்.

சிங்கார சென்னை 2.0 என்ற திட்டத்தின்கீழ் பெருநகர சென்னை மாநகராட்சி, பூங்கா துறையின் மூலமாக மாநகராட்சிக்கு உட்பட்ட காலியாக உள்ள திறந்தவெளி நிலங்களில் புதிய பூங்காக்கள் மற்றும் விளையாட்டுத்திடல்கள் அமைக்கவும் மற்றும் ஏற்கனவே உள்ள பூங்காக்கள் மற்றும் விளையாட்டுத் திடல்களை மேம்படுத்தும் பணிகள் என 46 எண்ணிக்கையிலான பணிகளுக்கு திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டு, தமிழ்நாடு நகர்ப்புற நிதி மற்றும் அடிப்படை வசதி மேம்பாட்டு நிறுவனத்திடம் *(TUFIDCO)* கூர்ந்து ஆய்வு செய்வதற்கு சமர்ப்பிக்கப்பட்டது.

தமிழ்நாடு நகர்ப்புற நிதி மற்றும் அடிப்படை வசதி மேம்பாட்டு நிறுவனம் *(TUFIDCO)*, திட்ட அறிக்கையில் உள்ள மதிப்பீட்டில் உள்ள சரத்துகளை முழுமையாக கூர்ந்து ஆய்வு செய்தும் மற்றும் பணிகளை செயல்படுத்தும் இடங்களை கள ஆய்வு செய்தும் பரிந்துரை செய்யப்பட்டது.

அதன்படி 17.12.2021 மற்றும் 11.01.2022 அன்று நடைபெற்ற திட்ட ஒப்புதல் அளித்தல் மற்றும் கண்காணிப்பு குழு *(Project Sanctioning and Monitoring Committee)* கூட்ட அறிக்கைகளின்படி 2021-22 ஆம் நிதியாண்டில் சிங்கார சென்னை 2.0 திட்டத்தின் கீழ் பெருநகர சென்னை மாநகராட்சியில் பல்வேறு பணிகளுக்கு ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. அதன் விவரம் பின்வருமாறு,

| Name of the Project | No.of works | Proposed Project Cost by GCC | Appraised Project cost by TUFIDCO | Singara Chennai 2.0 Share FY 2021-22 |
|---|---|---|---|---|
| | | (Rupees in Lakhs) | | |
| Green Field (Park) Development / mprovement | 28 | 2767.15 | 2442.79 | 2442.79 |

| | | | | |
|---|---|---|---|---|
| Play Field Development / Improvement | 8 | 569.25 | 538.39 | 538.39 |
| Play Field | 10 | 872.15 | 718.80 | 718.80 |
| **Total** | **46** | **4208.55** | **3699.98** | **3699.98** |

இதன் தொடர்ச்சியாக, பெருநகர சென்னை மாநகராட்சி, பூங்கா துறை மூலம் சிங்கார சென்னை 2.0 திட்டத்தின் கீழ் 46 பணிகளுக்கு ஒப்பந்த புள்ளி கோரப்பட்டு, ஒப்ப அறிவிப்பு வெளியிடப்பட்டு, 22 பணிகளுக்கு ஒப்பந்ததாரர்கள் தேர்வு செய்யப்பட்டு, சிறப்பு அதிகாரி/மன்றம் அவர்களின் ஒப்புதல் பெறப்பட்டு, ஒப்ப ஏற்பு கடிதம் வழங்கப்பட்டுள்ளது.

மீதமுள்ள 24 பணிகளுக்கு மின்னணு முறையில் *(e-tender)* ஒப்பந்தப்புள்ளி திறக்கப்படும் நாள். 28.01.2022, 01.02.2022 மற்றும் 08.02.2022 என ஒப்ப அறிவிப்பு Deccan Chronicle, தினகரன் நாளிதழ்களில் 14.01.2022 அன்றும், Deccan Chronicle, The Hindu, முரசொலி, தீக்கதிர் நாளிதழ்களில் 21.01.2022 அன்றும், பெருநகர சென்னை மாநகராட்சி ஒப்பந்தப்புள்ளி செய்தி மலர் மற்றும் மாநில ஒப்பந்தப்புள்ளி செய்தி மலர்களில் 30.12.2021, 20.01.2022, 13.01.2022 மற்றும் 27.01.2022 அன்றும் பிரசுரிக்கப்பட்டது.

இந்நிலையில், 26.02.2022 அன்று தமிழ்நாடு உள்ளாட்சி தேர்தல் அறிவிக்கப்பட்டதால், தேர்தல் நடத்தை விதிமுறை அமுலுக்கு வந்தது. இதனால், மேற்கண்டவாறு அறிவிக்கப்பட்ட நாட்களில் ஒப்பந்தப்புள்ளிகள் திறக்கப்படவில்லை. 23.02.2022 அன்று தேர்தல் நடத்தை விதிமுறை விலக்கி கொள்ளப்பட்டது. இதன் தொடர்ச்சியாக, 23.02.2022 அன்று ஒப்பத்தில் கலந்து கொண்ட ஒப்பந்ததாரர்கள் முன்னிலையில் ஒப்பந்தப்புள்ளிகள் திறக்கப்பட்டு, தொழில்நுட்ப ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டது.

இதில், 12 ஒப்பந்தப்பணிகளுக்கான தொழில்நுட்ப தகுதிப்பெற்ற ஒப்பந்ததாரர்களின் ஒப்பத் தொகை மற்றும் ஒப்ப விழுக்காட்டின் விவரம் பின்வருமாறு சமர்ப்பிக்கப்படுகிறது.

**(அட்டவணை-I)**

| Sl. No. | File No / PARK.C.No | No. of Participants | Name of the L1 contractor | Work value Rs. | Quoted amount Rs. | Quoted % |
|---|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) |
| 1 | P2/2022-4/2021 | 1 | P. Purshothaman | 1798004.92 | 1977805.41 | (+) 10.00% |
| 2 | P2/2022-5/2021 | 1 | P. Purshothaman | 2173377.99 | 2390715.79 | (+) 10.00% |
| 3 | P2/2022-13/2021 | 3 | R.V. Engineering Construction | 1540967.82 | 1725883.96 | (+) 12.00% |
| 4 | P2/2022-14/2021 | 3 | V. Arumugam | 11341005.31 | 10728591.02 | (-) 5.40% |
| 5 | P2/2022-15/2021 | 4 | K. Sathish kumar | 6318247.71 | 5844379.14 | (-) 7.50% |
| 6 | P2/2022-16/2021 | 5 | G. Venugopal | 3633846.28 | 3234123.19 | (-) 11.00% |
| 7 | P2/2022-21/2021 | 2 | K. Sathish kumar | 7231430.36 | 7014487.44 | (-) 3.00% |
| 8 | P2/2022-30/2021 | 3 | K. Sathish kumar | 7354801.75 | 7722541.84 | (+) 5.00% |
| 9 | P2/2022-38/2021 | 1 | S. Gowthaman | 6753724.96 | 6645665.36 | (-) 1.60% |
| 10 | P2/2022-39/2021 | 1 | K. Kandan | 3016355.98 | 2865839.82 | (-) 4.99% |
| 11 | P2/2022-41/2021 | 1 | K. Kandan | 1505151.91 | 1430044.83 | (-) 4.99% |
| 12 | P2/2022-43/2021 | 1 | K. Sathish kumar | 8077068.76 | 8642463.57 | (+) 7.00% |

குறைந்த விலைப்புள்ளி அளித்த சில ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியானது 2020-21 ஆம் ஆண்டு அலுவலக விலை விவரப்பட்டியலுடன் ஒப்பிடுகையில் சில பணிகளுக்கு அதிகமாகவும், சில பணிகளுக்கு குறைவாகவும் இருப்பதை கருத்தில் கொண்டு, குறைந்த ஒப்ப புள்ளிகள் அளித்த (L1) ஒப்பந்ததாரர்களிடம் விலைக் குறைப்பு கோரி கடிதம் அளிக்கப்பட்டது. அதன்படி ஒப்பந்ததாரர்கள் விலைக்குறைப்பு செய்து கடிதம் அளித்துள்ளார்கள். விலைக்குறைப்புக்கான ஒப்பத் தொகையின் விவரம் பின்வருமாறு பட்டியலிடப்படுகிறது.

**பூ.து.ந.க.எண்.பி2/2022-4/2021**

**(அட்டவணை-II)**

| S. No | File No / PARK.C.No. | Name of the Bidder (L1) | Work Value Including GST | Quoted % | % Offered After Negotiation |
|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) |
| 1 | P2/2022-4/2021 | P. Purshothaman | 1798004.92 | (+) 10.00% | (+) 6.01% |
| 2 | P2/2022-5/2021 | P. Purshothaman | 2173377.99 | (+) 10.00% | (+) 6.90% |
| 3 | P2/2022-13/2021 | R.V. Engineering Construction | 1540967.82 | (+) 12.00% | (+) 5.10% |
| 4 | P2/2022-14/2021 | V. Arumugam | 11341005.31 | (-) 5.40% | - |
| 5 | P2/2022-15/2021 | K. Sathish kumar | 6318247.71 | (-) 7.50% | - |
| 6 | P2/2022-16/2021 | G. Venugopal | 3633846.28 | (-) 11.00% | - |
| 7 | P2/2022-21/2021 | K. Sathish kumar | 7231430.36 | (-) 3.00% | (-) 3.90% |
| 8 | P2/2022-30/2021 | K. Sathish kumar | 7354801.75 | (+) 5.00% | (+) 2.00% |
| 9 | P2/2022-38/2021 | S. Gowthaman | 6753724.96 | (-) 1.60% | (-) 2.00% |
| 10 | P2/2022-39/2021 | K. Kandan | 3016355.98 | (-) 4.99% | - |
| 11 | P2/2022-41/2021 | K. Kandan | 1505151.91 | (-) 4.99% | - |
| 12 | P2/2022-43/2021 | K. Sathish kumar | 8077068.76 | (+) 7.00% | (+) 6.50 % |

எனவே, குறைந்த விலைப்புள்ளி அளித்த ஒப்பந்ததாரரிடம் பேச்சுவார்த்தைக்குப்பின் ஒப்புக்கொண்ட விழுக்காட்டிற்கு மேற்கண்ட ஒப்பந்ததாரர்களுக்கு பணியை வழங்க உயர்மட்ட ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வு குழுமம் கூட்டத்தில் பரிந்துரை வேண்டி சமர்ப்பிக்கப்பட்டது.

மேற்கண்டவற்றின்படி, குறைந்த விலை விகிதம் அளித்த கீழ்க்கண்ட ஒப்பந்ததாரர்களுக்கு பணியை வழங்க *25.02.2022* அன்று உயர்மட்ட ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வு குழுமம் கூட்டத்தில் பரிந்துரை வழங்கி உள்ளது.

**அட்டவணை -III**

| S. No | File No / PARK.C.No. | Name of the Bidder (L1) | Originally Quoted % | 2020-21 (SOR) % Offered After Negotiation finally quoted % | 2020-21 (SOR) % Offered After Negotiation (including 12% GST) (Rs.) | Comparative % of tender with current SOR 2021-22 (in %) |
|---|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) |
| 1 | P2/2022-4/2021 | P. Purshothaman | (+)10.00% | (+) 4.09% | 1871543.32 | (-) 6.43% |
| 2 | P2/2022-5/2021 | P. Purshothaman | (+)10.00% | (+) 4.10% | 2262486.48 | (-) 6.71% |
| 3 | P2/2022-13/2021 | R.V. Engineering Construction | (+)12.00% | (-) 2.00% | 1510148.46 | (-) 12.52% |
| 4 | P2/2022-14/2021 | V. Arumugam | (-) 5.40% | (-) 5.40% | 10728591.02 | (-) 15.20% |
| 5 | P2/2022-15/2021 | K. Sathish kumar | (-) 7.50% | (-) 7.50% | 5844379.14 | (-) 16.29% |
| 6 | P2/2022-16/2021 | G. Venugopal | (-) 11.00% | (-) 11.00% | 3234123.19 | (-) 16.93% |
| 7 | P2/2022-21/2021 | K. Sathish kumar | (-) 3.00% | (-) 3.90% | 6949404.58 | (-) 11.70% |
| 8 | P2/2022-30/2021 | K. Sathish kumar | (+) 5.00% | (+) 2.00% | 7501897.79 | (-) 10.05% |
| 9 | P2/2022-38/2021 | S. Gowthaman | (-) 1.60% | (-) 2.00% | 6618650.46 | (-) 9.40% |
| 10 | P2/2022-39/2021 | K. Kandan | (-) 4.99% | (-) 4.99% | 2865839.82 | (-) 12.25% |
| 11 | P2/2022-41/2021 | K. Kandan | (-) 4.99% | (-) 4.99% | 1430044.83 | (-) 14.47% |
| 12 | P2/2022-43/2021 | K. Sathish kumar | (+) 7.00% | (+) 4.45 % | 8436498.32 | (-) 3.77% |

**பூ.து.ந.க.எண்.பி2/2022-4/2021**

எனவே,

1) குறைந்த விலைப்புள்ளி அளித்த ஒப்பந்ததாரர்களுக்கு மேற்கண்ட அட்டவணை-IIIல் கலம் எண் 5-ல் உள்ள ஒப்ப புள்ளி சதவிகிதம் மற்றும் கலம் எண்.6ல் உள்ள ஒப்பத் தொகைக்கு பணியினை வழங்கவும்,

2) மேற்காணும் பணிகளுக்கான ஒப்பந்ததார்களுக்கு “சிங்கார சென்னை 2.0” திட்டத்தின் கீழ் பட்டி தீர்வு செய்யவும்,

மேற்கண்ட 1 மற்றும் 2 ஆகிய இனங்களுக்கு, சிறப்பு அதிகாரி- நிலைக்குழு(பணிகள்), நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களின் அனுமதி கோரிய முதன்மைச்செயலர் மற்றும் ஆணையரது 28.02.2022 நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

**“1 மற்றும் 2 ஆகிய இனங்களுக்கு, சிறப்பு அதிகாரி- நிலைக்குழு(பணிகள்), நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டது”.**

******

நி.ம.உ.து.ந.க.எண்.எல்இ8/1240/2020

தீர்மானஎண். 164/2022 நாள்:28-02-2022

பெருநகர சென்னை மாநகராட்சி - நிலம் மற்றும் உடைமைத் துறை - *Phase-II* - சென்னை மெட்ரே இரயில் திட்டத்திற்காக பெருநகர சென்னை மாநகராட்சிக்கு சொந்தமான நிலத்தினை நிரந்தர அடிப்படையில் இட ஒதுக்கீடு செய்ய அரசாணை பிறப்பிக்கப்பட்டது - கூட்டுப்புலத்தணிக்கை மேற்கொள்ளப்பட்டது - மண்டல அலுவலரின் அறிக்கை பெறப்பட்டது - சென்னை மெட்ரோ இரயில் திட்டப்பணிகளுக்காக நிரந்தர அடிப்படையில் சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்திற்கு வழங்குவதற்கு அனுமதி.

அரசாணை நிலை எண்.47, Planning, Development and Special Initiatives (S.I) Department, Date: 07.08.2020-ன்படி, புரசைவாக்கம் வட்டம் / கிராமம், மண்டலம்-6, பெரம்பூர் பேரக்ஸ் சாலை, பிளாக் எண்.27, புல எண்.1760-ல் அமைந்துள்ள கல்லறை நிலத்தில் (Cemetry Land) 1466 சதுர மீட்டர் நிலத்தினில் மெட்ரோ இரயில் திட்டப்பணிகள் மேற்கொள்ள நிரந்தர அடிப்படையில் சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்திற்கு நிலம் வழங்க ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

மாவட்ட வருவாய் அலுவலர்/நிமஉது அவர்களின் 01.09.2020 நாளிட்ட கடிதத்தில், மேற்படி புரசைவாக்கம் வட்டம் / கிராமம், மண்டலம்-6, பகுதி-17, வார்டு-78, பெரம்பூர் பேரக்ஸ் சாலை, பிளாக் எண்.27, புல எண்.1760-ல் அமைந்துள்ள நிலத்தினை நிலம் மற்றும் உடைமைத்துறை தனி வட்டாட்சியர், சார் ஆய்வாளர் ஆகியோருடன் இணைந்து 08.09.2020 அன்று காலை 11.00 மணிக்கு கூட்டுப்புலத்தணிக்கை மேற்கொள்ள உரிய அலுவலரை அனுப்பி வைக்குமாறு மாவட்ட வருவாய் அலுவலர், சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம் மற்றும் மண்டல அலுவலர்-6 ஆகியோரை கோருவதற்கும், மேலும், கூட்டுப்புலத்தணிக்கைக்கு முன் மேற்படி நிலத்திற்குரிய ஆவணங்கள் மற்றும் விரிவான அறிக்கையினை உடன் இவ்வலுவலகத்திற்கு அனுப்புமாறு மண்டல அலுவலர்-6 அவர்களையும் கேட்டுக்கொள்ளப்பட்டது.

தனி வட்டாட்சியர்/நிமஉது அவர்களின் 08.09.2020 நாளிட்ட புலத்தணிக்கை குறிப்பில், மேற்படி புலமானது பெரம்பூர் பேரக்ஸ் சாலையினை ஒட்டி அமைந்துள்ளது. இப்புலமானது கிறிஸ்துவ மக்களுக்கென ஒதுக்கீடு செய்யப்பட்ட கல்லறையாகும். ஆனால் கடந்த பத்து ஆண்டுகளுக்கு மேலாக இறந்தவர்கள் புதைக்கப்படவில்லை என தெரியவருகிறது. தற்சமயம் பாதுகாப்பிற்காகவும், பராமரிப்பிற்காகவும் நியமிக்கப்பட்ட நான்கு குடும்பங்களை சார்ந்தவர்கள் வசித்து வருகின்றனர். இந்த மயானம் பெருநகர சென்னை மாநகராட்சியால் பராமரிக்கப்படவில்லை. வகைப்பாடு சர்க்கார் புறம்போக்கு என்றிருந்தாலும், அரசு செயலாளர் மிஷனரி கான்பெரன்ஸ் என்று அடங்கல் கலத்திலும், அரசு பொது கல்லறை என பயன்பாட்டு கலத்திலும் குறிப்பிடப்பட்டுள்ளது. பத்து ஆண்டுக்கு மேல் இறந்தவர்கள் புதைக்கப்படாமல் உள்ள நிலையில் மெட்ரோ இரயில் நிறுவனம் முன்பகுதியில் 866 ச.மீ நிரந்தர அடிப்படையில் கோரி உள்ளது. இப்பகுதியில் மூன்று சிதிலமடைந்த Tombs உள்ளது. இது தவிர்த்து நான்கு குடும்பம் தங்கியிருக்கும் நான்கு ஷெட் உள்ளது. மீதி பரப்பு காலியாக உள்ளது. முன்புறத்தில் கல்லறை பயன்பாட்டிற்கும் வழி ஒதுக்கிட வேண்டும் என்ற நிபந்தனைகளுக்குட்பட்டு மண்டல அலுவலரின் குறிப்பினை பெற்று மெட்ரோ இரயில் நிறுவனத்திற்கு நிலமாற்றம் செய்ய நடவடிக்கை எடுக்கலாம் என தெரிவித்துள்ளார்.

மண்டல அலுவலர்-6 அவர்களின் 24.12.2020 நாளிட்ட கடிதத்தில், மேற்படி புலமானது வட்டாட்சியர் புரசைவாக்கம் அவர்களின் நிரந்தர நிலப்பதிவேட்டின்படி அரசு பொது கல்லறை என தெரியவருகிறது. மேலும் இவ்விடமானது கிறிஸ்துவ பொது மக்களுக்கான இடுகாடாக பயன்படுத்திக்கொள்ள ஒதுக்கப்பட்டதாகவும், இவ்விடுகாட்டில் சுமார் 10 வருடங்களாக எந்த ஒரு உடலையும் அடக்கம் செய்யவில்லை என்றும், இந்த இடுகாட்டினை பராமரிக்க நான்கு குடும்பங்கள் மட்டும் இந்த இடத்தில் வசித்து வருவதாக தெரியவருகிறது. கூட்டுப்புலத்தணிக்கையில் மெட்ரோ இரயில் திட்டப்பணிகள் மேற்கொள்ளப்படும் பொழுது இதில் வசித்து வரும் நான்கு குடும்பங்களுக்கு 6 மீட்டர் பொது வழிப்பாதையும், மெட்ரோ இரயில் நிறுவனத்தின் கட்டிடத்தின் பின்பகுதியில் அவர்களுக்கு வீடும் கட்டித்தர மெட்ரோ இரயில் நிறுவனம் ஒப்புக்கொண்டதிற்கிணங்க மேற்கண்ட பிளாக் எண்.27, புல எண்.1760-ல் உள்ள

<u>நி.ம.உ.து.ந.க.எண்.எல்இ8/1240/2020</u>

நீளம் 46.40xஅகலம்23.50 = 1090m2 , நீளம் 20.20xஅகலம்22.50 = 454.80m2 = ஆக மொத்தம் = 1544.90 சதுர மீட்டர் கொண்ட நிலத்தினை மேற்கண்ட நிபந்தனைகளுக்கு உட்பட்டும், மெட்ரோ இரயில் நிறுவன பணிகள் மேற்கொள்ளும் பொழுது பொதுமக்களுக்கு இடையூறு ஏற்படாமல் தகுந்த பாதுகாப்புடன் பணிகள் மேற்கொள்ளவும், கட்டிட இடிபாடுகளை உடனுக்குடன் அகற்றிடவும், சாலையில் ஏற்படும் பள்ளங்களை உடனுக்குடன் சரி செய்திட அறிவுறுத்தியும் மேற்கண்ட இவ்விடத்தினை மெட்ரோ இரயில் நிறுவனத்திற்கு பார்வையில் கண்டுள்ள அரசாணையின்படி ஒதுக்கி பணி மேற்கொள்ள பெருநகர சென்னை மாநகராட்சி நிலம் மற்றும் உடைமைத்துறைக்கு தெரிவித்துக்கொள்ளப்படுகிறது என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் மேற்படி நிலமானது பொது கல்லறை நிலமாக (Cemetry Land) இருப்பதால், இப்பொருள் குறித்து தொலைபேசி வாயிலாக சென்னை மெட்ரோ இரயில் நிறுவன துணை ஆட்சியரிடம் கோரப்பட்டதில், சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்தால் திட்டப்பணிகள் மேற்கொள்ள கோரியுள்ள வரைபடத்தில் குறிப்பிடப்பட்டுள்ள இடமானது, இறந்த உடல்கள் ஏதும் புதைக்கப்படாமல் காலியாக உள்ளது என 31.01.2022 நாளிட்ட சென்னை மெட்ரோ இரயில் நிறுவன மாவட்ட வருவாய் அலுவலரின் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே, இந்நேர்வில், புரசைவாக்கம் வட்டம் / கிராமம், மண்டலம்-6, பகுதி-17, வார்டு-78, பெரம்பூர் பேரக்ஸ் சாலை, பிளாக் எண்.27, புல எண்.1760-ல் அமைந்துள்ள கல்லறை நிலத்தில் (Cemetry Land) வரைபடத்தில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு இறந்த உடல்கள் புதைக்கப்படாத நிலத்தினில், நிரந்தர அடிப்படையில் வழங்கப்படவுள்ள 1466 சதுர மீட்டர் நிலத்திற்கு வழிகாட்டு விலை மதிப்பின் அடிப்படையில் கணக்கிடப்பட்டுள்ள நிலக்கிரயத்தொகையான (1466 x 43275 = 6,34,41,150) ரூ.6,34,41,150/-ஐ (ரூபாய் ஆறு கோடியே முப்பத்து நான்கு இலட்சத்து நாற்பத்தோராயிரத்து நூற்று ஐம்பது மட்டும்) பெருநகர சென்னை மாநகராட்சிக்கு உடன் செலுத்த வேண்டுமென்ற நிபந்தனைக்குட்பட்டும், மேலும், உடல்கள் புதைக்கப்பட்டுள்ள கல்லைறைகளுக்கு எவ்வித சேதமும் ஏற்படாமலும், முன்புறத்தில் கல்லறை பயன்பாட்டிற்கும் வழி ஒதுக்கிட வேண்டுமென்ற அடிப்படையிலும், சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம் ஒப்புக்கொண்டதிற்கிணங்க இடுகாட்டினை பராமரிக்க அவ்விடத்தில் வசித்து வரும் நான்கு குடும்பங்களுக்கு 6 மீட்டர் பொது வழிப்பாதையும், மெட்ரோ இரயில் நிறுவனத்தின் கட்டிடத்தின் பின்பகுதியில் அவர்களுக்கு வீடும் கட்டித்தர வேண்டுமென்ற அடிப்படையிலும், மெட்ரோ இரயில் நிறுவன பணிகள் மேற்கொள்ளும் பொழுது பொதுமக்களுக்கு இடையூறு ஏற்படாமல் தகுந்த பாதுகாப்புடன் பணிகள் மேற்கொள்ளவும், கட்டிட இடிபாடுகளை உடனுக்குடன் அகற்றிடவும், சாலையில் ஏற்படும் பள்ளங்களை உடனுக்குடன் சரி செய்திட வேண்டுமென்ற அறிவுறுத்தல்களின்படியும், சென்னை மெட்ரோ இரயில் திட்டப் பணிகளுக்காக நிரந்தர அடிப்படையில் சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்திற்கு வழங்குவதற்கு சிறப்பு அதிகாரி-நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களின் அனுமதி கோரிய முதன்மைச்செயலர் மற்றும் ஆணையரது 28.02.2022 நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

**“சென்னை மெட்ரோ இரயில் திட்டப் பணிகளுக்காக நிரந்தர அடிப்படையில், சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்திற்கு நிபந்தனைகளுடன் வழங்குவதற்கு, சிறப்பு அதிகாரி-நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டது”.**

* * * * * *

**ப.து.ந.க.எண்.*D1/LA/SD/WDCN02/0115/2022***

**தீர்மானஎண்.165/2022** **நாள்:28-02-2022**

# தானப்பத்திரம்

மண்டலம்-*2*,கோட்டம்-*19*ல் (1) Mr.A.Theerthy (GPA for Mrs. V. Selvakumari) அவர்கள் S.No.81/2A2A1, 2A2B, 2B1A, 2B1B, 2B2 of Mathur village ல் அமைந்துள்ள நிலத்திற்கு குடியிருப்பிற்கான மனைப்பிரிவு அனுமதி வேண்டி D1/LA/SD/ WDCN02/00115/2022 நாள்:25.02.2022ன்படி விண்ணப்பம் அளித்துள்ளார்கள்.

மனைப்பிரிவில் காட்டப்பட்டுள்ள சாலைக்கான நிலங்களை தானப்பத்திரம் மூலம் வழங்க வேண்டும் என்று அரசாணை G.O.Ms.No.181 வீட்டு வசதி மற்றும் ஊரக வளர்ச்சி துறை, நாள்.09.12.2020-ல் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி, இம்மனைப்பிரிவில் சாலை, திறந்தவெளி ஒதுக்கீட்டு நிலம் மற்றும் பொது பயன்பாட்டிற்கென ஒதுக்கப்பட்டுள்ள நிலங்களை தானப் பத்திரம் மூலம் பெருநகர சென்னை மாநகராட்சி வசம் ஒப்படைக்கப்பட வேண்டும்.

விண்ணப்பதாரர்களான Mr.A.Theerthy (GPA for Mrs.V. Selvakumari) மனைப்பிரிவில் சாலைக்கென ஒதுக்கப்பட்ட நிலங்களை மற்றும் பூங்காவிற்கான நிலம் மற்றும் பொது பயன்பாட்டிற்கான நிலங்களை தானப்பத்திரம் மூலம் பெருநகர சென்னை மாநகராட்சிக்கு ஒப்படைக்க இசைவு தெரிவித்து தானப்பத்திரம் அளித்துள்ளார்கள்.

இது தொடர்பாக கீழ்கண்டவாறு தெரிவித்துக் கொள்ளப்படுகின்றது:

(அ)Mr.A.Theerthy (GPA for Mrs. V. Selvakumari) அவர்கள் மனைப்பிரிவு அனுமதி வேண்டி சமர்ப்பித்த திட்ட வரைபடத்தின்படி 9928.00 சதுர மீட்டர் ஆகும். அவற்றில் சாலைக்கென 3388.80 சதுர மீட்டர் நிலம் பூங்காவிற்கான 600.00 சதுர மீட்டர் நிலம், பொது பயன்பாட்டிற்கான 51.20 சதுர மீட்டர் நிலம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

(ஆ)Mr.A.Theerthy (GPA for Mrs. V. Selvakumari) அவர்கள் மனையினை அபிவிருத்தி செய்ய உரிமையுள்ளவராக அறியப்படுகிறார். மனை உரிமையாளர் பட்டாவினை, தனி வட்டாட்சியர், மாதவரம் வட்டம் அவர்களிடம் இருந்து பெற்றுள்ளார்கள்.

(இ)விண்ணப்பதாரர் சமர்ப்பித்த வரைபடம் Tamil Nadu Combined Development & Building Rules, 2019 க்கு ஏற்ப உள்ளது. மனைப்பிரிவிற்கு அணுகு சாலையாக 9.00 மீட்டர் அகலம் உள்ள மனைப்பிரிவு சாலை அமைந்துள்ளது. விண்ணப்பதாரர் சமர்ப்பித்த மனைப்பிரிவில் உள்ள மனைகள் அனைத்தும் குறைந்தபட்சம் 72.00 ச.மீ பரப்பளவு உள்ளதாக அமைந்துள்ளது.

(ஈ)Tamil Nadu Combined Development & Building Rules, 2019ன் படி *10,000* ச.மீ கீழே நிலத்தின் பரப்பளவு இருந்தால் திறந்தவெளி ஒதுக்கீட்டிற்கு நிலமாகவோ அல்லது அதற்கு ஈடான தொகை யாகவோ செலுத்தலாம்.

(ஊ) Tamil Nadu Combined Development & Building Rules, 2019 உள்ள விதிகளின் படி, மனைப்பிரிவு வேண்டி சமர்ப்பிக்கும் பொழுது, மனையின் பரப்பளவில் *(*சாலை பகுதி நீங்கலாக*)* மனை பரப்பளவில் 1% பொது பயன்பாட்டிற்கு ஒதுக்கப்பட வேண்டும். அதில் 0.5% TANGEDCO - விற்கு மற்றும் 0.5% பெருநகர சென்னை மாநகராட்சிக்கும் தானப்பத்திரம் மூலம் அளிக்க வேண்டும். Mr. A. Theerthy (GPA for Mrs. V. Selvakumari) அவர்கள் அதற்கேற்றவாறு 51.20ச.மீ நிலத்தை பொது பயன்பாட்டிற்காக பெருநகர சென்னை மாநகராட்சிக்கு தானமாக அளிக்க இசைவு தெரிவித்துள்ளார். மேலும், 54.8 ச.மீ பரப்பளவு TANGEDCO விற்கும் ஒதுக்க இசைவு தெரிவித்துள்ளார்.

(எ) மனைப்பிரிவில் காட்டப்பட்டுள்ள சாலை மற்றும் சாலை விரிவாக்கத்திற்கான தேவையான தோராய அபிவிருத்தி கட்டணமாக விண்ணப்பதாரரிடம் இருந்து கட்டணம் வசூலிக்க வேண்டும். மனைப்பிரிவில் காட்டப்பட்டுள்ள சாலையினை அபிவிருத்தி செய்ய தேவையான தொகை ரூ.50,00,000/- வசூலிக்கப்பட வேண்டும்.

**ப.து.ந.க.எண்.*D1/LA/SD/WDCN02/0115/2022***

மனைப்பிரிவு வரைபடம் விதிமுறைக்கு உட்பட்டு உள்ளதாலும், விண்ணப்பதாரர் Mr.A.Theerthy (GPA for Mrs. V. Selvakumari) அம்மனையினை மேம்படுத்துவதற்கு உரிமை உள்ளவராக கருதுவதாலும் சாலைக்கென 3388.80 சதுர மீட்டர் நிலம் பூங்காவிற்கான நிலம் 600.00 சதுர மீட்டர் பொது பயன்பாட்டிற்கான நிலம் 51.20 சதுர மீட்டர் பரப்பளவு நிலம் ஆகியவற்றை தானப்பத்திரம் மூலம் பெருநகர சென்னை மாநகராட்சி எடுத்துக் கொள்ளலாம் என்று கருதப்படுகிறது.

எனவே,

(1) S.No.81/2A2A1, 2A2B, 2B1A, 2B1B, 2B2 of Mathur village ல் அமைந்துள்ள நிலத்திற்கு மனைப்பிரிவு வேண்டி விண்ணப்பிக்கப்பட்டுள்ள திட்ட வரைபடத்தில் சாலைக்கென 3388.80 சதுர மீட்டர் நிலம், பூங்காவிற்கான 600.00 சதுர மீட்டர் நிலம், பொது பயன்பாட்டிற்கான 51.20 சதுர மீட்டர் நிலம் ஆகியவற்றை Mr.A.Theerthy (GPA for Mrs.V.Selvakumari) அவர்களிடமிருந்து தானப்பத்திரம் மூலம் பெருநகர சென்னை மாநகராட்சி தானமாக எடுத்துக் கொள்வதற்கும்,

(2) சாலைக்காக ஒதுக்கப்பட்டுள்ள நிலத்தில் மற்றும் சாலை விரிவாக்கம் செய்ய ஒதுக்கப்பட்டுள்ள நிலத்தில் தெரு விளக்குகள் அமைக்க செலவின தொகை ரூ.50,00,000/- (ரூபாய் ஐம்பது லட்சம் மட்டும்) மனை உரிமையாளரிடமிருந்து ஆணையர், பெருநகர சென்னை மாநகராட்சி" என்ற பெயரில் வரைவு காசோலையாக வசூலிக்கவும்,

மேற்கண்ட *1* மற்றும் *2* ஆகிய இனங்களுக்கு, சிறப்பு அதிகாரி – நிலைக்குழு(நகரமைப்பு) மற்றும் மன்றம் அவர்களின் அனுமதி கோரிய முதன்மைச்செயலர்/ஆணையரது 28.02.2022 நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

**" தானப்பத்திரம் *1* மற்றும் *2* ஆகிய இனங்களுக்கு, சிறப்பு அதிகாரி - நிலைக்குழு(நகரமைப்பு) மற்றும் மன்றம் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டது".**

*** * * * * ***

சு.து.நகஎண்.B1/2325 /2020

தீர்மானஎண். 166 / 2022 நாள்:28-02-2022

**பெருநகர சென்னை மாநகராட்சி - பொதுசுகாதாரத்துறை - கோவிட் நோய் தடுப்பு பணி - தினந்தோறும் கொரோனா நோய் உறுதி செய்யப்பட்ட நபர்களின் விவரங்கள் *(Positive Case Details)* சேகரிக்கவும், மற்றும் உயர் அலுவலர்கள் உடனுக்குடன் கொரோனா நோய் தொற்று சம்பந்தமான விவரங்களை தெரிந்து கொள்ளவும், பெருநகர சென்னை மாநகராட்சியில் *M/s.ATSUYA TECHNOLOGIES* வெளிநிறுவனம் மூலம் ஒப்பந்த அடிப்படையில் கோவிட் மென்பொருள் மேலாண்மையை *(Design, Development and Deployment of GCC Covidcare Digital Platform for end to end Covid Management)* உருவாக்கி *01.05.2020* முதல் *31.10.2021* வரையில் பராமரிக்க சிறப்பு அதிகாரி மன்றம் அவர்களின் அனுமதி பெறப்பட்டுள்ளது - இப்பணியினை *01.11.2021* முதல் *28.02.2022* வரையில் மேலும் *4* மாத காலத்திற்கு பணி நீட்டிக்க அனுமதி.**

நோவல் கொரோனா வைரஸ் காய்ச்சல் (COVID - 19 ) உலகமெங்கும் 200 க்கும் மேற்பட்ட நாடுகளில் பரவியுள்ள நிலையில் உலக சுகாதார நிறுவனம் (WHO) உலகமெங்கும் அவசர நிலையினை (Public Health Emergency of International Concern (PHEIC)) பிரகடனப்படுத்தியுள்ளது. மேலும் கட்டுப்படுத்தக்கூடிய தொற்று நோயாகவும் (Controllable Pandemic) அறிவித்துள்ளது.

தமிழக அரசின் உத்தரவின்படி பெருநகர சென்னை மாநகராட்சி, பொது சுகாதாரத்துறை சார்பில் நோவல் கொரோனா வைரஸ் காய்ச்சலின் தாக்கம் தற்போது அதிகரிக்க தொடங்கியுள்ளது இதன்காரணமாக பல்வேறு தடுப்பு நடவடிக்கைகள் பெருநகர சென்னை மாநகராட்சியால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

பெருநகர சென்னை மாநகராட்சியில், தினந்தோறும் மற்றும் இதுவரையில் கோவிட் நோய் உறுதி செய்யப்பட்ட நபர்களின் விவரங்கள் சேகரிக்கவும், இது சம்பந்தமான செயல்பாடுகளை எளிமைப்படுத்தவும், மாநகராட்சி பணியாளர்களின் பணி சுமையினை குறைக்கும் வகையிலும், பொதுமக்கள் எளிதாக கோவிட் சம்பந்தமான மருத்துவ வசதிகளை பெறவும் மற்றும் உயர் அலுவலர்கள் உடனுக்குடன் இது சம்பந்தமான விவரங்களை தெரிந்து கொள்ளவும் பெருநகர சென்னை மாநகராட்சியில் கோவிட் மென்பொருள் மேலாண்மையை ( Design, Development and Deployment of GCC Covidcare Digital Platform for end to end Covid Management) உருவாக்கி செயல்படுத்த M/s. ATSUYA TECHNOLOGIES, நிறுவனத்திற்கு ஆணை வழங்கப்பட்டது.

| S.NO | Cost Line Item | Total Cost (Inclusive GST charges) Rs. |
|---|---|---|
| 1 | Phase-1 Development Cost for Phase-1 features for 11 resources working on the project from May 2020 to Aug 2020 | 55,03,365 |
| 2 | Phase-2 Development Cost for Phase-2 features for 8 resources working on the project from Sep 2020 to Nov 2020 | 31,01,567 |
| 3 | Infrastructure Cloud Cost for May-15th – 31st Oct 2020* | 16,96,000 |
| 4 | AMC Cost for 5 Resources who would be supporting from Dec 2020 to Apr 2021 | 15,00,000 |
| TOTAL | (Rupees One Crore Eighteen Lakhs Nine Hundred and thirty two only) | 1,18,00,932 |

சிறப்பு அதிகாரி/மன்றத்தீர்மான எண்.552/2020 நாள்.18.08.2020 மற்றும் தீர்மான எண்.434/2021 நாள்.30.04.2021ன்படி, M/s. ATSUYA TECHNOLOGIES நிறுவனத்தினர் மூலம் கோவிட் மென்பொருள் மேலாண்மை (Design, Development and Deployment of GCC Covidcare Digital Platform for end to end Covid Management) தொடர்பாக பராமரிப்பு பணி மேற்கொள்ள மே 2020 முதல் 31.10.2021 வரையில் அனுமதி பெறப்பட்டுள்ளது.

**சு.து.நகஎண்.B1/2325 /2020**

கொரோனா நோய் தொற்று மேலும் குறைக்க மேற்கண்ட நிறுவனத்தினர் மென்பொருள் பராமரிப்பினை 01.11.2021 முதல் 28.02.2022 வரை மேலும் நான்கு மாத காலத்திற்கு பணி நீட்டிப்பு செய்ய துணை ஆணையர் (சுகாதாரம்) அவர்களின் 28.02.2022 நாளிட்ட அனுமதி பெறப்பட்டுள்ளது. மேற்காணும் 4 மாதத்திற்கான மென்பொருள் பராமரிப்பு செலவின தொகை பின்வருமாறு :

| S.NO | Discription | Cost/Month | 4 Month |
|---|---|---|---|
| 1 | Monthly Maintenance cost (Including resources) | 3,00,000 | 12,00,000 |
| 2 | Infra Cost cloud | 1,75,000 | 7,00,000 |
| | | Total Cost | 19,00,000 |

நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை (P1) துறையின் அரசாணை (Ms) எண்.95 நாள்.13.03.2020மற்றும் நிதித்துறை கடிதம் எண்.74/JS(MA)/Finance(Salaries) /2020 நாள்.01.04.2020ன்படி, கொரோனா நோய் தடுப்பு நடவடிக்கை மேற்கொள்ள தமிழ்நாடு ஒளிவு மறைவற்ற ஒப்பந்தங்கள் சட்டம் 1998 பிரிவு 16-a அவசர காலங்களில் செயல்பட ஒப்பம் கோரும் அலுவலருக்கு ஒப்ப விதிகளில் தளர்வு செய்து ஒப்பம் கோருவதில் இருந்து விலக்களித்து நேரடியாக கொள்முதல் செய்ய அதிகயாரம் அளிக்கப்பட்டுள்ளது.

Tamil Nadu Transparency in Tenders Act, 1998 Sec:16 :"Provision of Act not to apply in certain cases: The provisions of section 9 and 10 shall not apply to procurement."

(a) During natural calamities and emergencies declared by the Government;

எனவே,

1. பெருநகர சென்னை மாநகராட்சி, பொதுசுகாதாரத்துறையில் அவசர அவசியம் கருதி தினந்தோறும் மற்றும் இதுவரையில் கோவிட் நோய் உறுதி செய்யப்பட்ட நபர்களின் விவரங்கள் சேகரிக்கவும், கோவிட் சம்பந்தமான செயல்பாடுகளை எளிமைப்படுத்தவும், மாநகராட்சி பணியாளர்களின் பணி சுமையினை குறைக்கும் வகையிலும், பொதுமக்கள் எளிதாக கோவிட் சம்பந்தமான மருத்துவ வசதிகளை பெறவும் மற்றும் உயர் அலுவலர்கள் உடனுக்குடன் இது சம்பந்தமான விவரங்களை தெரிந்து கொள்ளவும் ஏதுவாக ஒப்பந்த அடிப்படையில் கோவிட் மென்பொருள் மேலாண்மையை (Design, Development and Deployment of GCC Covidcare Digital Platform for end to end Covid Management) உருவாக்கி செயல்படுத்த M/s. ATSUYA TECHNOLOGIES, Mumbai-400610, நிறுவனத்திற்கு பணியணை வழங்கப்பட்டு மென்பொருள் உருவாக்கப்பட்டு டிசம்பர் 2020 முதல் அக்டோபர் 2021 வரையில் மென்பொருள் பராமரிப்பிற்கான பணியாணை வழங்கப்பட்டது, தற்போது கொரோனா தொற்று மேலும் குறைய மேற்கண்ட நிறுவனத்தின் மென்பொருள் பரமாரிப்பினை 01.11.2021 முதல் 28.02.2022 வரையில் மேலும் நான்கு மாதகாலத்திற்கு பணி நீட்டிப்பு செய்து பணியாணை வழங்கிட அனுமதியும்,
2. தமிழ்நாடு ஒளிவு மறைவற்ற ஒப்பந்தங்கள் சட்டம் 1998 பிரிவு 16-aல் அவசர காலங்களில் செயல்பட ஒப்பம் கோரும் அலுவலருக்கு ஒப்ப விதிகளில் தளர்வு செய்து கொள்முதல் செய்ய அதிகாரம் அளிக்கப்பட்டதின் அடிப்படையில் ஒப்பம் கோருவதில் இருந்து விலக்களித்து நேரடியாக மேற்கண்ட நிறுவனத்தின் மூலம் மென்பொருள் பராமரிப்பினை 01.11.2021 முதல் 28.02.2022 வரை மேலும் நான்கு மாத காலத்திற்கு பணி நீட்டிப்பு செய்ய அனுமதியும்,

3. இப்பணிக்கான நிர்வாக செலவினம் நான்கு மாதத்திற்கு (01.11.2021 முதல் 28.02.2022 வரை) ரூ.**19,00,000**/- (ரூபாய் பத்தொன்பது இலட்சம் மட்டும்) மேற்கொள்ள அனுமதியும் ,
4. மேற்கண்ட நிறுவனத்தினரிடம் பிணை வைப்பு தொகையாக பெறுவதில் இருந்து விலக்கு அளிக்கவும், மற்றும் ஒப்பந்தம் செய்யவும்,
5. பணி முடிந்து கணினி பிரிவு/மின்சாரத்துறை (EDP Cell)யின் சான்று பெற்று பட்டி தீர்வு செய்யவும்,
6. இச்செலவினம் கோவிட் நிதியின் கீழ் பிரிவு குறியீடு 30-31-01 கணக்கு குறியீடு 230-70-12-03 என்ற தலைப்பின் கீழ் மேற்கொள்ள அனுமதியும்,

மேற்கண்ட *1* முதல் *6* வரை உள்ள இனங்களுக்கு, சிறப்பு அதிகாரி-நிலைக்குழு(சுகாதாரம்), நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களின் அனுமதி கோரிய முதன்மைச்செயலர் மற்றும் ஆணையரது 28.02.2022 நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

**"*1* முதல் *6* வரை உள்ள இனங்களுக்கு சிறப்பு அதிகாரி - நிலைக்குழு(சுகாதாரம்), நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டது".**

******